Registered as a NewsPaper பக்கங்கள் 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்:-03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 05 (17 - 04 - 1992) வெள்ளிக்கிழமை ஓசை: 59

## மட்டு. மாவட்டத்திற்கான தொலைத்தொடர்புகருவி கண்டிக்குச் சென்றது

மட்டக்களப்பு தொலைத்தொடர்புத் திணைக்களத்திற்சென அனுப்பி வைக்கப்பட விருந்த இரண்டாயிரம் லைன்கள் கொண்ட தொலைத் தொடர்பு பரிவர்த்தனை இயந்திரம் கண்டி தொலைத் தொடர்புத் திணைக்களத் (8 ஆம் பக்கம் பார்க்க)

# தெற்கில் நெருக்கடியை சமாளிக்க வடக்கு கிழக்கில் போர் நடவடிக்கை

## சிங்கள அரசின் தந்திரோபாயம்

(கொழும்பு)

**தென்னிலங்கையில் தலைதூக்கியுள்ள அரசியல், பொருளாதார நெருக்கடியை திசைதிருப்பும் நோக்கத்துடனேயே வடக்கு கிழக்கில் போர் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த பிரேமதாசா அரசு முனைவதாக கொழும்பிலுள்ள ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.**

தென்னிலங்கையில் திரு' பிரேமதாசா அரசாங்கத்திற்கு எதிரான அரசியல் நெருக்கடிகள் தீவிரமாகி வருகின்றன. ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எதிராக லலித்-காமினி குழுவினர் குற்றம் சாட்டத் தொடங்கியதில் இருந்து தீவிரமாகிய அரசியல் நெருக்கடி தற்பொழுது முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல அரசாங்கம் எதிர்க் கட்சியினரைக் கொலை செய்ய கொலைகாரப் படை ஒன்றைப் பயன் படுத்தியதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து மேலும் தீவிரமாகியது.

இதேவேளை இராணுவச் செலவீடு அதிகரிப்பும் எதிர்பார்த்த வேளையில் வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப் பெறாமையும், நாட்டில் நிலவும் கடும் வரட்சியினால் ஏற்பட்டுள்ள பாதிப்பும் பாரிய பொருளாதார நெருக்கடிகளையும் அரசிற்கு ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் நிவாரண உதவிக்கு மட்டும் பல நூறு கோடி ரூபாய்கள் தேவைப் படுகின்றது.

இவ்வாறாக எழுந்துள்ள அரசியல் பொருளாதார நெருக்கடிகளினால் அரசிற்கு எதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சொல்லொணாத் துயரில் மூதூர் தமிழ் மக்கள்

(அம்பாறை)

''மூதூர் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இம் மக்களின் இவ்வாறான நிலையைப் போக்க அரசு முன்வராதது வேதனைக்குரிய விடயமாகும்.''

இவ்வாறு மூதூர் அண்ணா மன்றத் தலைவர் பூபா செல்வநாயகம் இ. தொ. கா. தலைவர் அமைச்சர் தொண்டமானுக்கு அண்மையில் அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த மகஜரில் மேலும் தெரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு வாகனக்குண்டுகள் தயார் நிலையிலாம்

[கொழும்பு]

மேலும் இரண்டு வாகனக் குண்டுகள் தயார் நிலையில் இருப்பதாக தமக்கு தகவல் கிடைத்திருப்பதாக கூட்டுப் படைத் தலைமையலுவலகம் அறிவித்துள்ளது.

அம்பாறை, மகரகம குண்டு வெடிப்பு தொடர்பாக கைது செய்யப்பட்ட இருவர் தம்மிடம் அந்தத் தகவலைவெளியிட்டதாக அவ் அறிவித்தலில் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் இக்குண்டுகள் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் பெற்றோல்தாங்கியினுள் தயார் செய்யப்பட்ட விசேட அறைகளில் இக்குண்டுகள் பொருத்தப்பட்டுள்ள

(8ஆம் பக்கம் பார்க்க)

## தொழிற் சங்கங்களுடனான மே தினக் கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல திணைக்கள, கூட்டுத்தாபன, தனியார்நிறுவனதொழிற் சங்க நிர்வாக உறுப்பினர்க்கான கலந்துரையாடல் ஒன்று மாவட்டச் செயலகம் கோண்டாவிலில், நாளை 18 4 1992 சனிக்கிழமை காலை 10. 00 மணிக்கு நடைபெறும் அனைத்து நிர்வாக உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## ராஜீவ் கொலை வழக்கு குற்றப்பத்திரிகை தயாராம்

(டில்லி)

ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடர்பான குற்றப் பத்திரிகைதயாராகி விட்டதாகவும் இது குறித்து புலனாய்வு துறையின் மூத்த அதிகாரி புதுடில்லியிலுள்ள அரச அதிகாரிகளுடன் ஆராய இருப்பதாகவும் இந்திய புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த கொலையில் விடுதலைப்புலிகளுக்கு இருக்கும் தொடர்புகள் பற்றிய ஆவணச் சான்றுகளை இந்திய சிறப்புப் புலனாய்வுத்துறை சேகரித்துள்ளதாகவும் டில்லியில் புலனாய்வுத்துறை அதிகாரி தெரிவித்தார்.

இந்த கொலை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஆணையின் பெயரிலேயே நடத்தப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சந்தனக்காடு கலைஞர்களுக்கு இன்று விருது வழங்கும் விழா

(நமது நிருபர்)

''சந்தனக்காடு'' நாடகக் கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 6. 00 மணிக்கு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

தமிழீழ மண்ணில் சமீப காலத்தில் தமிழ் நாடகத் துறையில் குறுகிய காலத்தில் ஐம்பது மேடைகளைச் சந்திக்கின்ற பெருமையை 'சந்தனக்காடு' நாடகம் பெற்றுக் கொள்கிறது. ஐந்து மாத காலத்திற்குள் ஐம்பது தடவை இந்த நாடகம் மேடையேற்றப்படுவது சாதனைக்குரியதே.

இந்த நாடகத்தில் பொ. சிவபாஸ்கரன், க. அமரசிங்கம், கா. நாகராசா, ச. உதயகரன், மா. நாகேந்திரசீலன், தி. திலகவேந்தன், க. சசிக்குமார், அ. தேவரஞ்சன் கா. மகேந்திரன், சூ பேனாட் க. மதுராந்தகன், தி. திலகதாசன், ஆ. தேவர் அண்ணா, திருமதி கலா கருணானந்தசிவம் ஆகியோர் பங்கேற்று நடித்துள்ளார்கள்.

இந்த நாடகத்திற்கு கதை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சுவிஸில் சலுகைகள் வெட்டு; அகதிகள் வருகையில் வீழ்ச்சி

[பேர்ண்]

சுவிட்சர்லாந்தில் அகதிகளின் பிரச்சினையில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் அகதி அந்தஸ்துக் கோரி விசாரணை. முடிவடையாமல் தேங்கிக் கிடந்த 52 350 பேரின் விண்ணப்பங்களை மிக விரைவாக ஆராய்ந்து முடிவெடுக்கும் சூழ் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அகதிகளுக்குப் பொறுப்பான அரசாங்க அதிகாரி பெர்சார்ட் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஒவ்வொரு மாதமும் 3500 அகதிகள்சுவிட்சர்லாந்தில் அகதி அந்தஸ்துக் கோரினர். ஆனால் கடந்த பெப்ரவரி மாதத்தில் 730 பேர் மட்டுமே அகதி அந்தஸ்துக் கோரியுள்ளனர்.

வேலை செய்வதற்குரிய அனுமதிப்பத்திரங்கள்கொடுக்கப்படாமை. உதவிப்பணம், சலுகைகள் குறைக்கப்பட்டமை போன்ற காரணங்களினால் அகதிகளின் வருகை குறைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதனால் அகதிகளைப் பராமரிக்கும் உத்தியோகத்தர்கள் அகதிகளை விசாரணை செய்

(2ஆம் பக்கம் பார்க்க)

## தியாகச் சுடர் அன்னை பூபதி நினைவாக இன்று

பருத்தித்துறை வட்டவைப் பிரிவில் இன்று வல்வெட்டித் துறை சிவன் கோவிலில் தியாகச்சுடர் அன்னை பூபதி நினைவாக அடையாள உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் இடம்பெறவுள்ளன.

அடையாள உண்ணாவிரதம் காலை 8. 00 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4 00 மணிவரை இடம் பெறும்.

நினைவஞ்சலிக் கூட்டம் பிற்பகல் 7. 00 மணிக்கு ஆரம்பமாகும். இந் நினைவஞ்சலிக் கூட்டத்தில் வாஞ்சிநாதன், செல்வன், சுரேஸ் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுவர்.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

## பணச் சுற்றோட்டத்தைச் சீராக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பணப் புழக்கம் மற்றும் பணச்சுற்றோட்டத்தைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

சீர்கெட்டிருக்கும் திரவ நிலைப் பணச் சுற்றோட்டத்தைச் சீராக்குவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் உயர்மட்ட ஆலோசனை செய்யப்பட்டது.

இலங்கை வங்கி முகாமையாளர்கள், மக்கள்வங்கியின் பிராந்திய முகாமையாளர். யாழ். அரசாங்க அதிபர் ஆகியோர் கலந்து கொண்ட அவசரக் கூட்டத்திலேயே இவ் ஆலோசனை செய்யப்பட்டது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## விலை குறைப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் அன்பளிப்பு ரூ.5 ஆகக்குறைக்கப்பட்டுள்ளது. நேற்று வெளிவந்த பங்குனி - சித்திரை இதழ் 12 பக்கங்கள் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### சோதிடம்

ஜாதகம் பார்க்க எழுத, எண்சோதிடம் கைரேகை சம்பந்தமாக வேலணை சோதிடர் V. A. சிவராசாவை 152 B அரசடிறோட் கந்தர் மடம் என்ற முகவரியில் சந்திக்கலாம். (2474)

### தவறிவிட்டது

புனித அந்தோனியார் கோவில் வீதி, சுண்டிக்குளியைச்சேர்ந்தசு. பரமேஸ்வரன் என்பவருடைய அடையாள அட்டையும் சில ஆவணங்கள் அடங்கிய பேர்சும் தாண்டிக் குளத்திற்கும் இயக்கச்சிக்கும் இடையில் 11-04,92 காலை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(2475)

## அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் லிமிற்றெட்

தபாற்கந்தோரடி, வட்டுக்கோட்டை

# தேவை

முகவர்கள்:

கமிஷன் அடிப்படையில் அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கும் பணம் வசூலிப்பதற்கும் முகவர்கள் தேவை. 20-50 வயதிற்குட்பட்ட தகுதி வாய்ந்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பிறப்புச் சான்றிதழ், கல்வித்தகைமைச் சான்றிதழ், நற்சாட்சிப்பத்திரங்கள், தேசிய அடையாள அட்டையின் போட்டோ பிரதி ஆகியவற்றுடன் 25-04-92 க்கு முன்பாக விண்ணப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்

(சி/4142)


## சிறிமாபுர களஞ்சியத்தில் பாரிய குண்டுவெடிப்பு

திருக்கோணமலை சிறிமாபுரத்திலுள்ள களஞ்சியம் ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை பாரிய குண்டு ஒன்று வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இக் குண்டு பெரிய சத்தத்துடன் வெடித்து நகரைபெரும்பரபரப்பிலாழ்த்தியது என்றும், ஆனால் எதுவித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.


## புதிய உயர் கல்லூரி
## New College of High Studies

ஆரியகுளம் சந்தி - யாழ்.

**A/L 94** ஆரம்பம் - 18-04-92

பொருளியல் — லோகசிங்கம்
கணக்கியல் — யோகராஜா
வர்த்தகம் — தேவா, பசில்
அளவையியல் — மகேந்திரன்
புவியியல் — குணராஜா
தமிழ் — மீரா, அரசியல் — கியூபேட்
வரலாறு-நாகராணி இந்துசமயம் - தயாளன்
இந்து நாகரிகம் — அருள்நங்கை

**பிரிவு - 1 மட்டுமே**

ஆதலால் முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

/4275) நிர்வாகி: S. அருள்நங்கை

## தவறி விட்டது

கணேசரத்தினம் மணிவண்ணன் ஆகிய எனது கைச்சங்கிலி 2 பவுண் பெறுமதியானது. சுன்னாகம் ஸ்ரேஷனுக்கும் காங்கேசன்துறை வீதி சம்பியன் லேன் மாத்தனை கோயிலுக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி 2476)


சுவிஸில்

யும் அதிகாரிகள் போன்றோருக்கு வேலைப்பழு குறைந்துள்ளதாகவும், இதனால் ஏற்கனவே தேங்கிக் கிடந்த விண்ணப்பங்கள் மீது விசாரணை ஆராய்ந்து அகதிகள் பிரச்சினையை விரைவாகமுடித்துக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகவும் பெர்சார்ட் தெரிவித்தார்.

தங்குமிட வசதிகள் போன்றவற்றைத் தொடர்ந்து பேணிப்பாதுகாக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய் விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் தேங்கிக் கிடக்கும் விண்ணப்பங்களை ஆராய்ந்த பின் நிராகரிக்கப்படக் கூடிய பல்லாயிரக் கணக்கானவர்களின் எதிர் காலம் என்னவாகும் என்பதுதான் தற்போது சுவிற்சர்லாந்தில் உள்ள தமிழர்களின் பிரச்சினையாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம.

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்குத் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**A/L கலை, வர்த்தகம்**

**94** புதிய பிரிவு - 1 [காலை 8-00 மணி]
**93** பிரிவு - 3 [காலை 8-00]

ஆரம்பம்: 18-04-1992

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — | திரு. சுப்பிரமணியம் |
| தமிழ் | — | திரு. குழந்தைவேல் |
| இந்துநாகரிகம்] இந்து சமயம் ] | — | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராஜா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. ஸ்ரீதரன் |

முக்கிய குறிப்பு:

1. அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும். குறிப்பிட்ட தொகை மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
2. A/L 94 ஆண்டுக்கான O/L கணிதம் சித்திபெறாத மாணவர்களுக்கு விசேட (கணிதம்) வகுப்புக்கள் சனி, ஞாயிறு காலை 7.00 - 9.00 வரை நடைபெறும்.

(4276)

**NEW MASTER INSTITUTE**
**BMC LANE**
**JAFFNA**

*A/L - 94*

பிரிவு - 1

விஞ்ஞான
கணித பாடங்கள்

ஆரம்பம்:
18 - 04 - 92
சனிக்கிழமை
காலை 8. 00 மணி

(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)
(சி 4273)


## நினைவு கூருகின்றோம்

## 1992-04-17

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய

★ **சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை**
(கதிரவெளி, வாகரை, மட்டக்களப்பு)

1986 ஆம் ஆண்டு நாவற்குழியில் சிறிலங்காப்படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

**லெப் ஜெரி** (சுப்பிரமணியம் யோகராசா - பெருங்குளம்சந்தி, இராம்புவில், சாவகச்சேரி)

1988 ஆம் ஆண்டு செட்டிப்பாளையத்தில் தேசவிரோதசக்திகளினால் கைதுசெய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட

**குருவி** (தம்பிராசா இராஜேஸ்வரன் - அம்பிலாந்துறை, மட்டக்களப்பு)

வல்வெட்டித்துறையில் இந்தியப்படையினரால் கைது செய்யப்படும்பொழுது தப்பிச் செல்கையில் சுடப்பட்டு வீரச்சாவெய்திய

**கப்டன் டேவிட்** (கந்தசாமித்துரை சிவகுமார் -96, கடற்கரை வீதி, பருத்தித்துறை)

கல்வியங்காட்டில் இந்தியப்படையினருடனான மோதலின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**கெனடி** (13/4, கச்சேரிகிழக்குஒழுங்கை, அரியாலை)

இதே ஆண்டு தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

★ **செல்லத்துரை சத்தியநாதன்**
(காரை தீவு, கல்முனை, அம்பாறை)

திருக்கோணமலை கட்டைப்பறிச்சான் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எம்மைப் பிரிந்த

★ **ஜெகன்** (கிருஷ்ணபிள்ளை ஜெயராசா -கட்டைப்பறிச்சான், மூதூர், திருக்கோணமலை)

1989 ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் முகாமில் வைத்து அடித்துக் கொலைசெய்யப்பட்ட

**ரஞ்சித்** (பொன்னுச்சாமி சிவனேஸ்வரன் - குமரக் கோட்டம், கோண்டாவில்)

1991 ஆம் ஆண்டு மன்னார் அடம்பன் ஆட்காட்டிவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**நாயகன்** (முருகையா வசந்தகுமார் - வவுனியா)

**ஜீவா** (நாகன் சிவலோகநாதன் மிருசுவில் வடக்கு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4271)


## DHL உங்கள் கடிதங்களை பாதுகாப்பாக உலகம் முழுவதும் எடுத்துச் செல்கிறது

உங்களின் நண்பன்

**DHL** தபால் சேவை

# D. H. L. INTERNATIONAL

*C/o Cosmos Marketing Services*
120, (200) *K. K. S. Road,*
Jaffna.

DHL WORLDWIDE EXPRESS

(சி/4274)

1991ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதி. மட்டக்களப்பிலுள்ள மையவட்டவான்—பாலாமடு பகுதிகளை சுற்றி வளைத்தனர் சிறிலங்கா இராணுவத்தினர். அன்று இடைவிடாத மழை. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி ஆற்றுடன் கலந்து கொண்டிருந்தது. இத்தனை நிகழ்வுகளுக்கு மத்தியிலும் போராளிகளை உருமறைப்புச் செய்து கொண்டிருந்தன ஆற்றங் கரையோரமாகவுள்ள கன்னாப்பற்றைகள்-முற்றுகை முடிய எவ்வளவு நேரமாகுமோ தெரியாது. இப்போதைக்கு சாப்பாடு இல்லை. இந்நிலையில் வேணு அண்ணையிடம் ஒருவன் சிசுகிசுத்தான் — '' தண்ணி விடாய்க்குது''



வேணு

வேணு அண்ணருக்கோ சூழ்நிலையை மறந்து சிரிப்பு வந்து விட்டது.'' இஞ்சை பாரடா நம்மச் சுத்திவரத் தண்ணியிருக்கு. ஆனா தவிச்ச வாய்க்குத் தண்ணி குடிக்க முடியாத நிலையில வச்சிட்டான் இந்தச் சிங்களவன் '' என்றார் தண்ணீருக்குள் விறைத்துக் கொண்டிருந்த அனைவரும் அவருடன் சேர்ந்து சிரித்து விட்டனர். அவர்களின் சத்தம் இராணுவத்தினருக்கு கேட்காத வகையில் மழையின் இரைச்சல் அவர்களுக்கு உதவியது.

இந்த மாதிரியெல்லாம் வாழ — பழக விடுதலைப் புலிகளால் மட்டுமே முடியும். அதுவும் ''சிரித்துக் கொண்டே செருக்களம் வாடா'' என்று பாடிய காசி ஆனந்தன் பிறந்த மண்ணல்லவா அது. அதைவிட இதைச் சொல்லிய வேணு அண்ணையின் வரலாறு எத்தகைய பெருமை மிக்கது? அரைக்காற்சட்டை போட்டுக் கொண்டு கையில் குண்டாந்தடியையும் வீசிக் கொண்டு பொலிஸ்காரர் உலாவிய காலத்திலிருந்து நீட்டுக் காற்சட்டை போட்ட பொலிஸ் இராணுவம்—விசேட அதிரடிப்படை— இந்திய இராணுவமும் அதன் ஏவற்குழுக்களும்— இவ்வாறாக ஒரு தொடர்ச்சியான முறையில் ஒடுக்கு முறைப் படைகளை எதிர் கொண்டு வந்த வேணு அண்ணர் இவ்வாறான முற்றுகைக்கெல்லாம் கதி கலங்கிப் போகக் கூடிய வரல்லர், மிக இயல்பாகவே இருந்தார், மனைவி, இரு பிள்ளைகள் இவர்களைப் பற்றிய நினைவு வராமலில்லை. ஆனால் இது அவர் தீர்மானித்துக் கொண்ட பாதை. பெரும்பாலான கறுப்புக் கோர்ட் காரர்களைப் போல தனது சொந்த நலனுக்காக இந்தத் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரித்த சட்டத் தரணியல்ல அவர்— எந்த விளைவுகளையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மனநிலை கொண்டவர்.

தென் தமிழீழத்தைப் பொறுத்த வரை தமிழ்த் தேசிய உணர்வை ஊட்டி வளர்த்தவர்கள் என்று குறிப்பிடப்படும் காசிஆனந்தன், சிவஜெயம், இரா. பரமதேவா, க. ரஞ்சன், பா. சின்னத்துரை பன்னீர்ச்செல்வம் ஆகியோர் வரிசையில் இவரது பெயரும் குறிப்பிடப்படுகிறது இவர்கள் அனைவருமே ஒரு காலத்தில் தந்தை செல்வாவின் சமாதியில் '' தமிழீழ இலட்சியத்தை கைவிடமாட்டோம்'' என்று சத்தியம் செய்த தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் வாய்ச் சொல்லில் நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் தான். ஆனால் கூட்டணியினரின் துரோகத் தனங்களைக் கண்டு அதிலிருந்து படிப்படியாக விலகி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தம்மை முற்றாக இணைத்துக் கொண்டவர்கள். இவர்களில் வேணு அண்ணா தான் மிக நீண்ட காலம் கூட்டணியினர் திருந்துவார்கள் என எதிர்பார்த்தவர்— அவரைப் பொறுத்தவரை அவர் விடுதலைப் புலிகளின் உணர்வுகளோடு ஒட்டியிருந்தவர். விடுதலைப் புலிகளை ஆதரிப்பதில்லை என்ற எழுத்தில் இல்லாத நடைமுறையைக் கொண்டிருந்த கூட்டணியினரின் போக்குக்குமாறானவர். ஆனாலும்எப்படியும் கூட்டணியினர் திருந்துவார்கள் என்று எதிர்பார்த்தார்.

இவரது வீடு மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து 400 யாருக்குள் தான். பிரதான வீதியில் அமைந்திருந்த இவரது வீட்டிற்கு முன்னால அடிக்கடி படையினரின் வாகனங்கள் சென்ற வண்ணம் இருக்கும். உள்ளே போராளிகளோடு சாவகாசமாக பேசிக்கொண்டிருப்பார் வேணு அண்ணா. அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய அரசியல் வேலைத்திட்டங்களைப் பற்றி அவர்களன் ஆராய்ந்து கொண்டிருப்பார். 84-85ஆம் ஆண்டு காலத்தில் நகருக்குள் சிறிலங்காப்படையினரிடமிருந்து தப்பி வரும் போராளிகள் நம்பிக்கையுடன் செல்வது இவரது வீட்டிற்குள் தான். சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே செல்லும் இவர். அவர்கள் வெளியேறுவதற்கான பொருத்தமான நேரம் வரும்வரை கண்ணில் எண்ணெயை விட்டுக்கொண்டு படையினரின் நடமாட்டம் பற்றி அவதானிப்பார்.

ஆரம்பகாலத்தில் விடுதலை உணர்வுள்ள இளைஞர்களை போராட்டத்துடன் இணைத்து விடுவதில் இவருக்கு பெரும் பங்கு இருந்தது. இளைஞர் பேரவை தலைவராக இருந்தவர் - எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் பணியாற்றியவர் என்ற காரணங்களினால் அமிர்தலிங்கத்தின் மகனால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த் தேசிய இராணுவத்திற்கு இளைஞர்களைத் திரட்டித்தருமாறு இவரிடம் வேண்டினர் கூட்டணியினர். இவரோ அந்த விடயத்தில் புலிகளின் பாதையையே உறுதியாக நம்பினார்.

எத்தனையோ தடவை முற்றுகைகள், விசாரணைகள் என்றெல்லாம் சந்திக்க வேண்டியிருந்தது. அப்போதெல்லாம் இவர் போட்டிருந்த சட்டத்தரணி அங்கிதான் இவரைக் காப்பாற்றியிருக்கிறது. இவரைப் பொறுத்தவரை அந்த வகையில்தான் உதவியிருக்கிறது இவரது சட்டத்தரணி அங்கி.

1987ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினருடனான போர் ஆரம்பித்ததைத் தொடர்ந்து அவர்களால் இவர் கைது செய்யப்பட்டார். கடுமையான முறையில் சித்திரவதைக்குள்ளான இவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் போது தேசத்துரோகக் கும்பலொன்று இவருக்கு நச்சு ஊசி பாய்ச்ச முனைந்தது அங்கு வேலை செய்யும் தாதியொருவர் போட்ட கூச்சலே இவரைக்காப்பாற்ற உதவியிருக்கிறது. அந்தக் கூச்சலில் அவர்கள் தமது முயற்சியைக் கைவிட்டு ஓடி விட்டனர். அதனால் மீண்டும் சிறைச்சாலை வாசம் - மட்டக்களப்பு மாவட்ட தொழிற் சங்கங்களின் சம்மேளனத் தலைவராக இருந்த இவர் தொடர்ச்சியாக இரு மேதினங்களை சிறையில் கழித்தார். இந்தியப் படை தனது கசப்பான அனுபவங்களுடன் இந்த மண்ணை விட்டு வெளியேறும் போது அவர்களால் விடுவிக்கப்பட்ட கடைசித் தொகுதியினரில் ஒருவராக இருந்தார் இவர்.

சிறைவாசம் இருந்ததை அரசியல் முதலீடாகப் பயன்படுத்தும் வகையைச்சேர்ந்த பழைய காலசட்டத்தரணியல்லஇவர்.




சிறைவாசம் முடிந்து வெளியே வந்ததும் மீண்டும் தீவிரமாகச் செயற்பட்டார். 1990 ஆம் ஆண்டில் சிறிலங்காப் படையினருடன் மீண்டும் போர்வெடித்ததைத் தொடர்ந்து இவர் தலைமறைவாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

★ ★

பன்குடாவெளிப் பகுதியில் தங்கியிருந்த இவரை இவரது மனைவி அடிக்கடி சந்திக்கவருவது வழக்கம். எத்தனையோ சோதனைகளுக்கு மத்தியிலேயே இச் சந்திப்புக்கு வாய்ப்புக் கிடைக்கும். தேசத்துரோகிகள், முஸ்லிம் காடையர்கள், சிறிலங்கா இராணுவத்தினர் எல்லோரையும் தாண்டி வருவதென்றால் இலேசான காரியமல்ல. இவ்வாறு ஒருநாள் இவர் வேணு அண்ணாவைச் சந்தித்து விட்டுச் செல்லும் போது துப்பாக்கிவேட்டுச்சத்தங்கள் கேட்டன. மிகுந்த சிரமத்தின் மத்தியில் அவரது சடலம் ஒருகிணற்றிலிருந்து மீட்கப்பட்டது. அவரது நகைகளைப்பறித்தபோது ஏற்பட்ட காயங்கள் கொலைக்காரணங்களை வெளிப்படுத்தியது.

★ ★

மனைவியின் இழப்பு அவரால் தாங்கமுடியாதது தான். குழந்தைகளின் எதிர்காலம் அவரைப் பயமுறுத்தியதுதான் இதற்காக அவர் துவண்டு விடவில்லை. அவரது பாதை தெளிவாக இருந்தது- போராளிகளுக்கு அரசியல் அறிவை ஊட்டினார். இயக்கத்தின் மொழிபெயர்ப்பாளர்களில் ஒருவராகவும் கடமையாற்றினார். அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இடம் பெயர்ந்த மக்களின் நலனைக் கவனித்தார் அதில் தான் திருப்தி கண்டார். அதுவே அவரது வாழ்வாயிற்று. பிள்ளைகளைச் சந்திப்பதும் நின்றுவிட்டது. அங்கிருந்த சூழ்நிலை சந்திப்புக்கு ஏற்றதாகஇருக்கவில்லை.

★ ★

போராட்டத்துடன் நீண்ட காலத் தொடர்புள்ளவர்கள் என்றவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான காந்தனுக்கும் இவருக்கும் இடையில் மிகுந்த நெருக்கம் இருந்தது. இருவரும் மனம் விட்டுப் பழகுவர். காந்தன் இருக்குமிடங்களிலேயே இவரையும் பெரும்பாலும் காணலாம். இருவருக்கும் இடையில் அப்படியொரு நட்பு இருந்தது.

11-12-1991 அன்று காலை காந்தன் நேற்றிரவுதான் கண்ட கனவை தன துநண்பர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தான் ரெண்டு பிள்ளைகளை ஒருத்தர் கொண்டந்து இனி இதுகளை நீங்கள்தான் காப்பாத்த வேணும் எண்டுசொல்லுறார். இதுக்கு என்ன அர்த்தமிருக்குப்?'' அவனது கேள்விக்கு சில மணித்தியாலங்களில் பதில் கிடைத்தது.

அழுதபடியே வந்த ஒருவர் அத்தகவலைச் சொன்னார். ''அகதிகளுக்கு குடிசை கட்டுறதுக்கு ஐ.சி.ஆர்.சியை கூட்டிக்கொண்டு வாறவழியிலை ஆமி படுத்திருந்து சுட்டானுகள். சத்துருக்கன், கண்ணாடி ராஜன், பிரசாந்த் ஆக்களோட வேணு அண்ணையும் செத்துப்போனார்''

அதிர்ச்சியிலிருந்து விடுபட நீண்ட நேரமாயிற்று காந்தனுக்கு. 1974 ஆம் ஆண்டிலிருந்து எங்கள் இனத்திற்காக அவர் எந்தெந்த வகையிலெல்லாம் பணியாற்றினார் என்றெல்லாம் நினைத்த போது தான் அந்த இழப்பின் தாக்கம் மிகக் கொடூரமானதாக இருந்தது அவனுக்கு.

# மாலைக்கண் நோயும் பரம்பரையும்

- மாறன்

ஆண்களில் 'ரெற்றினைற்றிஸ் பிக்மென்றோஸா' என்கிற ஒருவித பரம்பரை வியாதியினாலேயே மாலைக்கண் நோய் ஏற்படுகிறது.

இவ்வியாதி பரம்பரையிலுள்ள கருப்பொருள் மூலம் கடத்தப்படுவதால், பரம்பரையில் தகப்பனுக்கு அல்லது தாய்க்கு இவ்வியாதி இருப்பின் அவர்களுடைய பிள்ளைகளில் ஐம்பது சத வீதமானோருக்கு இவ் வியாதி ஏற்படும் ஆபத்திருக்கிறது. அதாவது அவர்களுக்கு நான்கு பிள்ளைகள் பிறக்கும்போது இரண்டு பிள்ளைகளுக்கு இந்நோய் ஏற்படும் ஆபத்திருக்கிறது. இதில் ஆண்பிள்ளையும் பெண்பிள்ளையும் சரிசமமாகப் பாதிக்கப்படுகிறார்கள். பாதிக்கப்பட்டவர்களே இந்நோயை அடுத்த பரம்பரைக்கு தமது பிள்ளைகளுக்கு கடத்துகிறார்கள். பெற்றோருக்கு இவ்வியாதி இருந்தும் அவர்களுடைய பிள்ளைகளுக்கு உதாரணமாக நான்கில் இரண்டு - ( 50 சதவீதம் ) இந்நோய் ஏற்படாது எனவே இவர்கள் தமது வாரிசுகளுக்கு பரம்பரையாக இந்நோயை கடத்தமாட்டார்கள் ஆனாலும் இவர்களுடைய உடலிலுள்ள கருப்பொருளில் இவ்வியாதிக்குரிய காரணி பலம் குன்றி இருப்பதால் இவர் தன்னைப் போன்ற, அதாவது வியாதியால் பாதிக்கப்படாத ஆனாலும் பரம்பரையில் வியாதி உள்ளவரை திருமணம் செய்து கொண்டால் இவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளில் 25 சத வீத மானவருக்கு அதாவது நான்கில் ஒரு குழந்தைக்கு இவ் வியாதி ஏற்படும் ஆபத்திருக்கிறது.

## வேறு அறிகுறிகள்

குழந்தை பிறந்தவுடனேயோ அல்லது குழந்தைப் பருவத்திலேயோ அல்லது வயது வந்த பின்னரோ இவ் வியாதி ஏற்படலாம். அத்துடன் செவிட்டுத்தன்மை கையில் மேலதிக விரல்கள் சிறுநீரகத்தில் பிரச்சினைகள் இருதயத்தில் நரம்புத்தொகுதியில் பிரச்சினைகள் இருக்கலாம். ஆரம்பத்தில், காலையில் கண்பார்வை மிகவும் தெளிவாகவும் பின்பு நேரம் போகப் போக மங்கிக் கொண்டு போவதையும் அவதானிப்பார்கள். பின்பு நடுப் பார்வை தெளிவாகவும் பக்கப்பார்வை மங்கியும் காணப்படும். அனேகமாக குழந்தைப் பருவத்தில் ஆரம்பமாகும். மாலையானதும் கண் தெரியாத தன்மை ஏறக்குறைய முப்பதுவயதாகும் போது பார்வைத்தளம் குறைந்து பின்பு வயது 60 - 70 ஆகும் போது கண்பார்வை முற்றாகக் குன்றிவிடும் சிலர் இவ்வியாதியினால் கற்றாக்ட் பாதிக்கப்படுவார்கள்.

சில குழந்தைகள் முதலில் செவிட்டுத்தன்மையாலும், அல்லது கைகளில் மேலதிக விரல்கள் ஏற்படுதல், உடல் பருமன் அதிகரித்தல் போன்ற வியாதிகளாலும் பாதிக்கப்படுவார்கள்.

## என்ன செய்ய வேண்டும்?

பரம்பரையில் மாலைக்கண் நோயுள்ளவர்களுடைய பிள்ளைகளுக்கு இப்படியான மேலதிகமான அறிகுறிகளும் ஏற்படும்போது வைத்திய ஆலோசனை பெறுவதுமிகவும் அவசியம். குழந்தையின் கண், காது, இருதயம் என்பன கவனமாகப் பரிசோதிக்கப்பட்டு, வேறு வியாதிகள் இருப்பின் ஆரம்பத்திலேயே இனங்காணப்படும்.

## சிகிச்சை முறை

ஆரம்பத்திலேயே இவ் வியாதி கண்டு பிடிக்கப்படும் போது, இவ் வியாதியினால் ஏற்படும் தலையிடி, கண் பார்வை குன்றுதல், வாசித்தல் படித்தலுக்குள்ள இடையூறுகள் என்பன பொருத்தமான மூக்குக் கண்ணாடி மூலமும், வேறு முறைகள் மூலமும் திருத்தப்படும். மேலும், இவ்வியாதியினால் சடுதியாக கண்பார்வை இழப்பு ஏற்படாது என்பதை தெரிந்து கொள்ளவேண்டும். இவ் வியாதியினால் முழுமையாக பாதிப்படைய ஏறக்குறைய முப்பது - நாற்பது வருடங்களுக்குமேல் எடுக்கும்.

இவ்வியாதியைப்பற்றி இன்னும் சில தப்பபிப்பிராயங்கள் பலரிடையே நிலவுகிறது. அதாவது, ஒரு பரம்பரை வியாதி என்பதால், இவ்வியா

(7ஆம் பக்கம் பார்க்க)

## சிறுகதை

# ஒட்டி

மணலாறு விஜயன்

விடுதலைக்கு இரண்டு கைகளையும் விலையாக்கியிருந்தான் றதன். மேசையில் இரண்டு பொய்க் கரங்களையும் கரண்டி ஒன்றையும் கொண்டு வந்து வைத்தான் சகபோராளி. கைகளை தனது வாயினால் எடுத்துக் கொழுவிக் கொண்டான். சாப்பாடு மேசையில் தயாராகியது.

கரண்டியையும் தன்வாயினால் எடுத்து பொய்க்கரங்களின் விரல் இடுக்கினுள் செருகி சாப்பிடத் தொடங்கினான். சோறு கறியினை வெகு சரளமாகப் புரட்டி எடுத்து வாயில் போட்டுக் கொண்டிருந்தான்.

சாப்பிடுவதை மறந்தவனாய் அவன் முன் இருந்தேன் நான். சாப்பிட்டவாறே மட்டக்களப்பில் தாங்கள் அனுபவித்த துன்ப வரலாறொன்றினைச்சொல்லிக் கொண்டிருந்தான்.

போரதீவு.

எங்களின் போராட்டத்தில் மறக்க முடியாத தீவு.

இந்திய மிருகங்களிடமிருந்து எங்களைக் காத்ததீவு.

போர் ஏறு தீவு.

முன்னொரு காலத்தில் காளை அடக்குதல் போன்ற வீரச்செயல்கள் நிகழ்த்தப்பட்ட இடமென்பதால் இந்தப் பெயர் வந்ததாக சொல்கிறார்கள்; இன்று போரதீவு என மருகிவிட்டது

'ஒட்டி'

இது போரதீவில் அமைந்துள்ள சதுப்பு நிலப்பகுதிக்கு வழங்கி வருகின்ற பெயர் சுமார் நூறு ஏக்கர் நிலம் வரை இச்சதுப்பு விரிந்து கிடக்கிறது.

நாணற்புற்கள், கிண்ணல் மரங்கள், வெல்லைமரங்கள் என்பன இச்சேற்று நிலத்தில் அடர்ந்து வளர்ந்திருக்கின்றன. பார்ப்பதற்கு சாதாரண தரை போல் இருக்கும். மேல் பரப்பில் மெல்லிய தடிப்பில் நீர் நிற்கும் இறங்கினால் அந்தளவுதான்; துணைக்கு யாரும் கிடைக்காவிடில் சமாதி எழுப்பவேண்டியது தான்.

சேறும் சகதியுமாய் அமைந்த இப்பகுதிக்குள் அங்கங்கு முதலைக் குழிகள்; அந்தக் குழிக்குள் வாயைப் பிளந்து கொண்டு கிடக்கும் முதலைகள். ஆபத்தென்று வந்த போது இந்த ஆபத்தான இடமே எங்களை காப்பாற்றி விட்டது.

மிறாண்டி ..., மலைவாழ்க்கை, குகை வாழ்க்கையெல்லாம் இனி சரிவராது மச்சான் இப்பிடியே போனால்ரெண்டு மூண்டு நாளில குப்பி கடிக்கிறதைத் தவிர வேற வழியே இருக்காது'' என்று லெப். கேணல். நீகனண்ணன்மிறாண்டிக்கு சொல்லிக் கொண்டிருந்தார்.

மிறாண்டி ஆதரவாளனாக இருந்தே முழுநேரமாக எங்களுடன் இணைந்து கொண்டவன். அவனுக்குத்தான் இங்கு நாம் தப்பிக் கொள்ளக் கூடிய இடங்களை சரியாகத் தெரியும்.

மிறாண்டி சில நிமிடம் ஆழமாக சிந்தித்துக் கொண்டிருந்தான். (ஒட்டி) இது அவனுக்கு பழகிப் போன பகுதி.

"நீகனண்ணா, வாருங்கோ; பாதுகாப்பான ஒரு இடமிருக்கு; அங்கு எவருமே வரமுடியாது'' என்று கூறி எழுந்து நடக்கத் தொடங்கினான். நாமனைவரும் பின்னே நடந்து கொண்டிருந்தோம்.

நேராக ஒட்டிக் கரையில் வந்து நின்றான் மிறாண்டி "எல்லாரும் உடுப்புகளைக் கழட்டி எடுத்துக் கொள்ளுங்கோ'' என்றான் உடுப்பினைக் கழட்டி கைகளில் எடுத்துக் கொண்டோம்.

மிறாண்டி சேற்றுக்குள் கால் புதைத்தான். சேற்றோடுபோராடியபடியேநகரத் தொடங்கினான். உடுப்பினையும் ஆயுதங்களையும் மேலே உயர்த்திக் கொண்டு பின் தொடர்ந்தோம். மிறாண்டி தலையில் இரண்டு மூண்டு பலகைகள்.

"மச்சான், மேலெல்லாம் ஏதோ கடிச்சுப்பிடிக்குதடா'' என்று பின்னால் வந்த நாம் வேதனையோடு சொன்னது மிறாண்டியின் காதில் விழுந்தது ஆனால் அவன் அதைப் பொருட்படுத்தியதாக தெரியவில்லை.

எதிர்கால குழந்தைகளின் இன்பத்துக்காய் துன்பங்களையும்,வேதனைகளையும் தாங்க வேண்டியேயிருந்தது.

இரண்டு மணித்தியாலங்கள் நடந்து விட்டு திரும்பிப் பார்த்தோம். இருநூறு யார் தூரத்தை மட்டுமே கடந்திருந்தோம். அருகில் அங்கொன்றும் இங்கொன்றுமாக கிடந்த முதலைக்குழிகளை பார்த்த போது ஒருவித பீதியும் ஏற்பட்டது.

அடர்ந்த நாணற்புற்களுக்குள் புகுந்ததும் வெளியே எதுவும் தெரியவில்லை. அந்தளவு அடர்த்தியாக அவை நெடுத்து வளர்ந்திருந்தன. நாணற்புற்களோடு வெல்லைமரங்களும், கிண்ணல்மரங்களும் செழித்து வளர்ந்து நின்றன.

வெல்லைமரத்தின் பலமான தடிகளை வெட்டி தொம்பலுக்குள் இறுக்கினான் மிறாண்டி கொண்டு வந்த பலகைகளை அவற்றின் மேல் பரவினான். பலகையில் ஏறி அமர்ந்தோம் உடல்முழுவதும் சேறுமயம். சேறுகழுவு மளவிற்கு அங்கே தண்ணீர்இல்லை. நிற்கும் தண்ணீரும் கழுவுவதற்கு ஏற்றதல்ல.

பலகையில் ஏறி இருந்த போதுதான் உடம்பு முழுவதும் கடித்துப் பிடித்துக்கொண்டிருந்த அட்டைகளைக்கண்டோம். காலிலிருந்து கழுத்து வரை அட்டைகள். வேதனைகள் தாங்கமுடியவில்லை ஒருவருக்கொருவர் மாறிமாறி அட்டைகளைப் பிடுங்கி எறிந்தோம்.

உடலிலுள்ள சேற்றினைக் கழுவவேண்டும். அந்தஒருசாண் தண்ணீர்......

சாக்கடைத் தண்ணீரின் மணத்தைக்கூட சகித்துக் கொள்ளலாம். ஆனால், இந்த நீரின் மணம்......

என்னசெய்வது; கழுவியாக வேண்டும். சில நாட்களின்பின்னர் இதைத்தான் குடிக்கப் போகின்றோமென்பதை அன்று நாம் எண்ணிக்கூடப் பார்க்க வில்லை.

நாட்கள் சில நகர்ந்தன.

சாப்பாடு வேண்டும்: தண்ணீர் வேண்டும். இரவில் சேற்றுக்குள்ளிருந்து வெளியே வரத் தொடங்கினோம். தேவையான பலகை, கிடுகு, உணவுப் பொருட்களை சிறுக சிறுக சேர்த்துக்கொண்டோம்.

பத்துப்பதினைந்தடி நீளஅகலத்தில் பலகைகளைப் பரவி, அதன்மேல் சிறிய கொட்டில்களை அமைத்துக் கொண்டோம். நாணற்புற்களை வளைத்து கிடுகினை மூடி முடிந்துவிட்டோம், அதற்கு மேல் கிண்ணலும், வெல்லை மரங்களும் மூடிநின்றதால் மேலே இருந்து பார்த்தாலும், கரையில் நின்று பார்த்தாலும் கொட்டிலிருப்பதை கண்டு பிடித்துவிட முடியாது.

எங்கள் புரையிலிருந்து (கொட்டில் பரண்) பார்த்தால் வெளியில் நடைபெறும் சகல இராணுவ நடமாட்டங்களும், நடவடிக்கைகளும் துல்லியமாக தெரியும். ஆனால் அவர்கள் எங்களை கண்டுவிட முடியாது. நாமிருந்த இடத்திலிருந்து இருநூற்றைம்பது யார் தூரத்திலேயே பிரதான வீதியும் அமைந்திருந்தது. எங்களுக்கு தேவையான குடிதண்ணீருக்குமட்டுமே இப்போது கிராமத்துக்குள் சென்றுவர வேண்டியிருந்தது.

ஒரு நாள் நாம் சாப்பிட்டு எஞ்சிய சொற்ப சோற்றினை கீழே போட்டோம் போட்டதும் அந்த சோற்றினைச்சுற்றி சுங்கன், பனையன், யப்பான் போன்ற மீன்கள் குவிந்து நின்றன. கறி எங்களுக்குக் கீழேயே நிற்பதைக் கண்டு பிடித்துவிட்ட மகிழ்ச்சி- ஆனால். அவற்றைப் பிடிப்பதுதான் தெரியாமலிருந்தது. அதையும் சிலநாட்களில் கண்டு பிடித்துவிட்டோம்.

பெரிய வேசின் ஒன்றில் சோறு கொஞ்சத்தினைப் போட்டு தண்ணீருக்குள் அமிழ்த்தினோம். வேசினுக்குள் சோறினைச் சுற்றி மீன்கள் குவிந்ததும் சடாரென வேசினுடன் மேலே தூக்கிக் கொண்டோம்.

அடுப்பிலிருந்து புகை எழும் பாதிருக்கக் காஸ் அடுப்பினையே பயன்படுத்தினோம். சமையலுக்குத் தேவையான தண்ணீருக்காகக் கிராமத்துக்குள் சென்று வந்தோம். சேற்றுடன் கூடிய எங்களின் காலடிகள் இந்திய மந்தைகளின் கண்களில் பட்டுவிட்டது. புலிகள் எங்கோ சேற்றுப்பகுதிக்குள்ளாக வந்துசெல்கின்றார்களென்ற உண்மையைப் புரிந்து கொண்டுவிட்டனர். ஆனால்; எங்கிருந்து வருகின்றார்களென்பதைக் கண்டுபிடிக்க முடியாது போய்விட்டது.

போரதீவு மக்கள் எங்களின் இருப்பிடத்தை நன்கு அறிந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் அனைவருமே எங்களை நேசித்தார்கள். ஒருவர் கூட எங்களிலிருந்து அந்நியப்பட்டு நிற்கவில்லை.

தண்ணீருக்காக நாம் வெளியே சென்று வருவது ஆபத்தாக முடியுமெனக் கருதினோம்.

''மிறாண்டி தண்ணீருக்கும் ஏதும் வழிசெய்யிடாப்பா'' என்று மிராண்டியிடம் நீகனண்ணன் வேண்டிக்கொண்டார். அன்று இரவே அவன் கிராமத்துக்கு வந்து இரண்டு தகரங்களுடன் திரும்பினான்.

சேற்றுக்குள் ஒரு கிணறு தோண்டினோம்.

தண்ணீர் நின்றது. ஆனால் மூக்கின்முன் கொண்டுவர முடியாது.

முடியாதென்றால் வேறுவழியென்ன, எதுவுமேயில்லை. அந்தத் தண்ணீரையே சுடவைத்துக் குடிக்கத் தொடங்கினோம்.

எங்களின் இந்த இருவருட வாழ்க்கையில் சாப்பாட்டுக்குப் போன செலவைவிட நுளம்புகளுக்குச் செலவிட்ட தொகையே அதிகமாக இருந்தது.

நுளம்புக்கடி.. அட்டைக் கடி... காலைச் சுற்றிப் பிடிக்கும் கண்ணாப் பாம்புகள்...

மலசலம் கழிப்பதற்குக்கூட நாம்பட்ட துன்பம் கொடுமையானது. கிண்ணல் மரக்கிளைகளில் ஏறி இருந்து விட்டுக் கழுவுவதற்காக இறங்கிப் புதைந்துபோன சோகக்கதையை யாருக்குச் சொல்ல முடியும். சகபோராளி என் கைகளைப் பிடித்து இழுத்தெடுக்காது விட்டிருந்தால நான் அன்றே சேறோடு சேறாகியிருப்பேன்.

இந்திய இராணுவத்தின் செல்வீச்சும், எறிகணைகளும் எங்கள் தலைக்கு மேலாகக் கூவிச்சென்று வெடித்த கதைகள் எவருக்கும் தெரியாது

ஒட்டி வாழ்கையில் நாம் இரண்டு போராளிகளை மட்டுமே இழந்தோம். அந்த இழப்பு இன்றும் கண்முன்னே தெரிகிறது.

ஒட்டிப்பகுதியில் நீர்மட்டம் சற்று உயர்ந்து கொண்டிருந்தது. எங்கள் வீரர்களில் றிச்சாட்டும், சோமனும் உயரத்தில் குறைந்தவர்கள். ஒட்டிக்குள் வரும்போதே சேற்றுக்குள் அவர்கள் தாண்டுபோயினர். இழுத்தெடுத்தே அவர்களைக் காப்பாற்றினோம்.

நீர்மட்டம் உயர்ந்துகொண்டு வந்து பலகையில் முட்டியது. அவசரமாக வெளியேற வேண்டி ஏற்பட்டால், இவர்களை வெளியே கொண்டுசெல்வது கடினமாகிவிடும். இதனால் இவர்களை முன் கூட்டியே கிராமத்துக்குள் அனுப்பினோம். ஆனால் அடிக்கடி ஏற்படும் சுற்றிவளைப்பில் ஒருநாள் அவர்கள் அகப்பட்டு விடுவார்களென்றோ, சுடப்பட்டு விடுவார்களென்றோ நாம் எதிர்பார்க்கவில்லை. எதிர்பாராமலே அது நடந்துவிட்டது.

ஆனால் எஞ்சிய எங்களை இறுதிவரை 'ஒட்டி' காத்தது.

அட்டைகளும், நுளம்பும், கண்ணாப் பாம்புகளும், முதலைகளும் எங்களுடன் ஒட்டிப் போன ஒட்டிவாழக்கை, விடுதலைப்போரில் எவருமே சந்திக்காத துயரமான வாழ்க்கையாகும்.

கதையும் முடியும்போது சாப்பாடும் முடிந்தது.

சாப்பிட்டு முடியும்போது றீகன் சிரித்துக்கொண்டே எழுந்தான். கைகளை இழந்தும் அவனிடமிருந்த சிரிப்பு என்னை வியப்பிலாழ்த்தியது.

★

## தனித்து விடப்பட்ட தீவின் புதல்வனுக்கு

உலகின் கண்ணாய சூரியன்
தனித்துப் போன
அந்தத் தீவிலும் எழுகிறான்

எனதருமைப் புதல்வனே
நீயும் எழுந்திருப்பாய்
கைவிடப்பட்ட கிராமத்தின் கண்மலர்வாய்.

முன்பெல்லாம்
நிலா மலர்ந்த முற்றத்திலே
மாரிலே சாய்த்தியுன்
தலை முடி கோதிய விரல்கள்
இன்று வெறுமனே நெஞ்சை வருட
நனைகின்ற விழியோரம்
என்
கிராமத்தின் கனவுகள் தடுமாறும்.

எட்டாத் தொலைவில்
இங்கேயுன் தந்தை
எனினும்
நீ தனித்துப் போனவன் அல்ல.

ஊரெல்லாம் உழுது வரும்
உன் செயலின் விளைவேந்த
மடிவிரித்துக் காத்திருப்பாள்
கிராமத்தின் தாயினியாள்

அண்ணாந்து பார் அங்கே
வானமெனும் தந்தை
உன் நிமிர்வை
கூவி அழைக்கிறான்

காண்
உனக் கென்றோர் காற்று வெளி
உனக்கெனவும் சிறகுகள்
உனக்குள்ளும் வானெட்டும் உந்தல்
முடி சூடிக் கொள்ள ஒரு சூரியன்

காற்றிலேறி
கிராமத்தின் குட்டி இளவரசனாய்
வலம்வா
அன்னையின் ஏந்துகரமாய் விரிந்த
வீதியெல்லாம்.

- சு. வி.

பாடுகளும்கிழித்தெறியப்பட்டு முந்திய தமிழ்த் தலைமைகளுக்கு மாறிமாறி இழைக்கப்பட்ட நம்பிக்கைத் துரோகங்களும்எமக்கு நன்கு தெரியும். டம் உள்நாட்டு வரம்புகளை மீறி, உபகண்டஎல்லைகளைத் தாண்டி, சர்வதேச அரசியல் அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது. இலங்கைத் தீவின்

# தீர்வை முன் வைப்பது யார்? அரசா? விடுதலைப் புலிகளா?

**இந்த மாதம் வெளி வந்த விடுதலைப்புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் இங்கே முழுமையாக தரப்படுகிறது.**

தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காண்பதாயின், அதற்கான தீர்வுத் திட்டத்தை முன்வைப்பது யார்? விடுதலைப் புலிகள் இயக்கம் தனது யோசனைகளை முதலில் முன்வைக்க வேண்டும் என வலியுறுத்துகிறது அரசு. ஒரு உருப்படியான தீர்வுத் திட்டத்தை அரசாங்கம் முன்வைத்தால் அதனைப் பரிசீலனை செய்யத் தயார் என்கிறது புலிகள் இயக்கம். இந்த முரண்பாடான நிலைப்பாடு இன்று அரசியல் உலகில் ஒரு சர்ச்சையைத் தோற்றுவித்ததுடன் சமரசமுயற்சிகளிலும் ஒரு மந்த நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தச் சிக்கலான விவகாரத்தில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதை, நாம் இங்கு தெளிவாக எடுத்து விளக்குகின்றோம்.

தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமையின் (தேசிய சுயநிர்ணய உரிமையின்) அடிப்படையில், தமிழர் தாயகத்தில் ஒரு சுதந்திரமான, இறைமையுடைய தனியரசை அமைப்பது தான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியற் குறிக்கோள் இது உலகறிந்த விடயம். சிங்கள ஆளும் வர்க்கத்திற்கும் இது தெரியாததல்ல.

தனியரசு என்ற குறிக்கோள் புலிகள் இயக்கத்தால் கண்டுபிடிக்கப்பட்டதல்ல. நீண்டதும், மிகவும் சிக்கலானதுமான தமிழரது அரசியற் போராட்டங்களின் ஒட்டுமொத்த விளைவாக, முதிர்ந்த முரண்பாட்டு நிலைகளால் எழுந்த வரலாற்றுத் தேவையாக, இந்தத் தனியரசுக் கோரிக்கை பிறந்தது. இந்தக் கோரிக்கையை நடைமுறைச் சாத்தியமாக்கும் ஆற்றலும் செயற்திறனும் பழைய தலைமையிடம் இருக்கவில்லை. இந்த வரலாற்று இடைவெளியை புலிகள் இயக்கம் நிரப்பியது. புலிகளின் தோற்றத்துடன் போராட்ட வடிவம் மாறியது. தன்னாட்சி உரிமைப் போர் முனைப்புற்றது. தமிழரின் சுதந்திர இயக்கம் இரத்தம் சிந்தும் புரட்சிப் போராட்டமாக எழுச்சி வடிவம் கொண்டது.

தமிழீழ மக்களின் தேசிய அபிலாசையாக வரலாற்று ரீதியாக எழுந்த தனியரசுக் கோரிக்கைக்கு ஒரு செயற்பாட்டு வடிவம் கொடுத்து அதனை நடைமுறைச் சாத்தியமாக்கும் இலட்சிய உறுதியுடன் புலிகள் இயக்கம் போராடி வருகிறது. எனவே புலிகள் இயக்கத்தின் அரசியல் இலட்சியம் என்ன என்பதில் எவருக்குமே எந்த ஐயப்பாடும்இருக்கத்தேவையில்லை.

சிங்களப் பேரினவாத ஆளும் வர்க்கமானது எந்தச் சூழ்நிலையிலும் தமிழருக்கு நீதி வழங்கப் போவதில்லை என்பது நாம் வரலாற்று ரீதியாகக் கற்றுக்கொண்ட கசப்பான பாடம். ஒப்பந்தங்களும் உடன்பாடுகளும்கிழித்தெறியப்பட்டு முந்திய தமிழ்த் தலைமைகளுக்கு மாறிமாறி இழைக்கப்பட்ட நம்பிக்கைத் துரோகங்களும்எமக்கு நன்கு தெரியும். எனவே பேச்சுக்கள், சமசரங்கள், உடன்பாடுகள் என்ற அரசியல் பொறிகளுக்குள் புலிகள் சிக்கிவிடப் போவதில்லை.

எனினும் ஒரு தேசிய விடுதலைப்போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதாயின் அரசியல், ராஜதந்திர சதுரங்க ஆட்டங்களுக்கு நாம் முகங்கொடுப்பது தவிர்க்க முடியாதது. எமது இலட்சியப் பாதையிலிருந்து சறுக்கி விழாமல், எமது மக்களின் தேசிய நலன்களைப் பேணும் வகையில், எமது போராட்டத்திற்கு உலக அங்கீகாரத்தை வென்றெடுக்கும் நோக்கில் அரசியல், ராஜதந்திரகாய்நகர்த்தல்கள் மிகவும் சாதுரியமாகக் கையாளப்படுவது அவசியம்.

எமது விடுதலைப் போராட்டம் உள்நாட்டு வரம்புகளை மீறி, உபகண்டஎல்லைகளைத் தாண்டி, சர்வதேச அரசியல் அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது. இலங்கைத் தீவின் பூகோள கேந்திர நிலையும், இந்தியாவின் பிரதேச ஆதிக்க அபிலாசைகளும் உலக முதலாளித்துவத்தின் சந்தை விஸ்தரிப்பு அக்கறைகளும் பின்னிப் பிணைந்ததாக ஒரு சிக்கலான பரிமாணத்தை அடைந்திருக்கிறது. இதனால், எமது மக்களின் தன்னாட்சிஉரிமைப் போராட்டத்திற்குச் சர்வதேச அங்கீகாரம் கிடைப்பதில் பல இடையூறுகள் இருக்கத்தான் செய்யும். இந்தச் சவாலையும் நாம் எதிர்கொள்ளத்தான் வேண்டும்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் ஒரு நியாயமான அரசியற் தீர்வுகாணும் முயற்சிகளுக்கு புலிகள் இயக்கம் தடைக்கக் கூடாது என்பதும்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தகாலச் சுவரோவியங்கள்

ஓவியங்கள் மனிகப்பண்பாட்டின் நீண்டகாலச் சுவடிகள். அழகியல் உணர்வினைத் தருவனவும், நிகழும் மாற்றங்களை (இயற்கை, மனிதவாழ்க்கை வளர்ச்சி சார்ந்தவை) பிரதிபலிப்பனவும் அவற்றினூடாக காலத்தைப் பதிவு செய்வனவுமாக அவை இருக்கின்றன. உலகின் பல்வேறுபட்ட (இன, மத மொழி, பிரதேச) பண்பாடுகளையும் வெளிப்படுத்தும் சிறந்த கட்புல ஊடகமாகவும் உள்ளது, இரசனையும், உணர்வுந்தலையும் ஏற்படுத்தும் நீடித்த நிலைகொண்ட இக்கலைவடிவம் அழகியல் மிகுந்து இலயிப்பற்குரியதாகின்றது.



ஓவியத்தில் சுவரோவியம் கேலிச்சித்திரம், தத்ரூப, ஓவியம், கோட்டுச்சித்திரம், வர்ணக்குழைவுச் சித்திரம் எனப் பல வகைப்பட்டன உண்டு. இவற்றின் வகைப்பாடுகள் வெவ்வேறு பண்புகளைக் கொண்டவை.

தற்போது மக்களின் கவனத்திற்கும் கருத்தூண்டலுக்குமாகத் தீட்டப்பட்டுள்ள சுவரோவியங்கள் சாதாரண வெளிச் சுவர்களில் தீட்டப்பட்டவை. இவை யாழ்ப்பாண நகரம், (வின்ஸர் திரையரங்கு முன்பாக) சாவகச்சேரி நகரம், அரியாலை, சித்தன் கேணி, சுன்னாகம், புத்தூர் ஆகிய ஆறு இடங்களில் அமைக்கப் பட்டுள்ளன. பொதுமக்கள்அதிகமாகக் கூடும்இந்தஇடங்களில் அவர்களின் கூடிய உடன் கவனத்தை பெறவேண்டும் என்பதன் பொருட்டு கட்டடங்களின் வெளிச்சுவரில் இவ்வோவியங்கள் தீட்டப்பட்டுள்ளன போலும்.

அனைவரினதும் கண்ணிலும் கருத்திலும் படக் கூடியதாக இவ்வோவியங்கள் அமையப் பெற வேண்டுமென்பதனால், சீமெந்தினால் கட்டப்பட்ட சாதாரணச் சுவர்களில் (வெளிப்புறம்) வெளியான இடங்களில் இவை அமைக்கப் பட்டுள்ளன. இவ்வாறான இடங்களைத் தெரிவு செய்யும் போது இயற்கை பாதிப்புக்களுக்கு (வெய்யில், மழை போன்ற) இவை முகம் கொடுக்க வேண்டியுள்ளன. எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு இவ்வோவியங்களுக்கான வர்ணங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. நீலம், கறுப்பு சிவப்பு, பச்சை, மண்ணிறம், மஞ்சள் போன்ற வர்ணங்களே இவற்றில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முன்னணியும் கொள்கின்றன.

சீமெந்தினால் கட்டப்பட்ட சாதாரண சுவர்களில் 'எமல்சன்' என்ற வர்ணக்கலவை அடிப்படை வர்ணமாகப் பூசப்பட்டு பின்னர், உருவ அமைவுகளுக்கு பொருத்தமான வர்ணங்கள் அதன்மேல் தீட்டப்பட்டுள்ளன.

இராணுவ வதைகள், பொருளாதாரத் தடைகள், உழைப்புச்சுமை இவற்றை வென்று முனைப்படையும் போராட்டம், உறுதியான செயற்பாட்டில் போராளிகள், நம்பிக்கையுடன்போராட்டத்தில் இணையும் மக்கள், மக்கள் எழுச்சி என்பனவற்றைச் சித்தரிக்க அவைக்கேற்ப பொருத்தமான வர்ணச் சேர்க்கைகள் அமைந்துள்ளமை சிறப்படைகின்றது.

கிராமத்தை இராணுவம் எரிக்கும் போது எழும் தீயும் புகையும் காட்சிப்படுத்தலில் சித்தரிக்கப்பட்டவிதம்பொருத்தமானதே. (இக்காட்சி தென் தமிழீழத்தின் இராணுவக் கொடுமைகளை மனதில் கொண்டு வருகின்றது.) இவ்வாறே வன்னியின் எல்லைக் கிராமங்களில் காவலுக்குச் செல்லும் காட்சியில் அச் சூழலுக் கமைவான மரங்களும் வயல்வெளிகளுமான பசுமை. ஒரு கைபிடி மண்ணிலே நம்முடைய ஒரு கிராமம். அழகும் வளமும் பொருந்திய கிராமத்தில் பனைகள், தென்னைகள், குடியிருப்புகள், மாவீரர்களின் துயிலுமில்லம் எனப் பேறுடைய இந்த மண் காட்டுவது இந்த மண்ணை விட்டு எங்கும் அகலத் தூண்டுமா? [மலைதாலும், வாழ்வாலும்] உருவ அமைப்புகள், வர்ணத் தீட்டல் இவையெல்லாம் புலனை ஊடுருவிபார்ப்பவரின் சிந்தனையைவிட்டகலா வண்ணம் நிலைக்கின்றன.

இவ் ஓவியங்களை கலைத்துவம் மிக்கனவாகவும், அழகியல் அம்சங்களின் நுண்மையினதாகவும் நோக்க முற்படின் அந்நோக்கர் தன் நிலையில் தவறுவர். அழகியல் லயிப்பு, கலைத்துவத்தை விடவும் மேலோங்கிப் பீறிட்டு நிற்பவை சித்தரிப்புகளே இச் சமகாலத்தின் சித்தரிப்புகளைக் காட்டுவதில் (இக்காட்சிப் படுத்தல் வடிவம்) வெற்றி பெறுவது. இந் நோக்கில் வெற்றியே! இவ்வாறான ஓவியங்கள் (சுவரோவியங்கள் தவிரவும்) எங்களுடைய போராட்டத்தில் வேறு இடங்களிலும் பங்காற்றுகின்றன. உதாரணமாக இப்போது பல இடங்களிலும் காணப்படும் 'நான் அகதியா? 'இல்லையம்மா' 'இது சிந்திக்கும் நேரமல்ல போராடுவோம் வா' என்ற சுவரொட்டிகளைக் குறிப்பிடலாம். முதலாவது சுவரொட்டியில் காணப்படும் சிறுமியின் வடிவம் ஒரு சிறுமிக்குரிய உருவத்தின் பொருத்தப்பாட்டை விடவும் அது கூறும் கருத்து நிலையே முதன்மை பெறுகின்றது. தனித்து நிற்கும் அவளைப் பார்க்கும் போது அவள் தனித்தவளல்ல நாம் இருக்கும்போது அவள் தனித்து விடப்படமாட்டாள் இந்த மண்ணில் அவள் நிற்கும்போது அவள்அகதியோ அனாதையோ அவள் இல்லை. இங்கே ஒரு போராளி இருக்கும் வரை நாங்களெல்லாம் வாழும் வரை நீ அகதி இல்லையம்மா என்று சொல்லத்தூண்டி விடும் உணர்வு மேலோங்குகின்றது. இதுவே இங்கே முதன்மைப்படுவது. இவ்வாறான தளை நீக்கப் பண்புகொண்ட சித்திரமே மற்றைய சுவரொட்டியுமாகும். குண்டு வெடிப்புகள், வேளைப்



பளு, வாழ்க்கை அவலம், இரத்தம் சிந்தல் தசைத் துண்டின் சிதறல் சாம்பல்மேடு என பின்னப்பட்டிருக்கும் வாழ்க்கையை விட்டு, மறந்து எதைச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றாய் இளைஞனே உன் உன்னுடைய எதிர்காலமென்ன? வாவா என கூவிய

மைக்கும் உந்துதலைத்தடுக்கின்றது.

இவையே இன்று தேவைப் படுபவை.

எனவே அழகியலுடன் கருத்துநிலைச் சித்தரிப்பே எமக்குத் தேவை. காலத்தின் தேவையுமாகும்.

(ஆயினும் அழகியல் அமைவும் இரசனையும் தனித்துவமானவை) ஆகவே கலைமதிப்பீட்டுடன் அவ் வடிவம் சொல்லும் சேதிகளே முக்கியமானவை.

இனி, இச் சுவரோவியங்கள் கூறும் செய்தியுடன், இவற்றுடன் இணைந்துள்ள கவிதை வரிகளும் பார்வையாளனின் உணர்வுகளில் இரட்டிப்புப் பிரதியீட்டினை ஏற்படுத்துவ

கருணாகரன்

தையும் குறிப்பிட வேண்டும்.

மக்கள் இச்சித்திரங்கள் முன் கூடிநின்று அவதானித்தல் அவர்கள் தமக்குள் பேசிக் கொள்ளும் வார்த்தைகள். அவர்கள் சுமந்து செல்லும் உணர்வுகள் எல்லாமே இவ்வோவியங்களின் நோக்கில் வெற்றியடைகின்றதன் அடையாளங்களாகும்.

தமிழீழப் போராட்டவரலாற்றில் சுவரொட்டிகளில் கருத்தூட்டலாகப் பங்காற்றி வந்த ஓவியமரபு இப்போது சுவரோவியங்களின் ஊடான கருத்து வெளிப்பாட்டிற்குத் தாவியுள்ளது.

இவை மரபை மீறிய யுத்த காலச் சேதிகளாகும்.

# பனை வளத்தை தேசிய வளமாக்க மாதிரிப் பனைப் பயிற்சி நிலையம்

கூடத்தனையில் கடற்கரையை அண்டிய சிறிபுரத்தில் அமைந்துள்ள மாதிரிப் பனைப் பயிற்சி நிலையம் 1991 ஏப்ரல் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 45 ஏக்கர் நிலத்தில் பயிற்சி நிலையம் அமைந்துள்ளது. இதன் பொறுப்பதிகாரியான திரு ரகுலஸ் சேவை மனப்பான்மையுடன் பணிபுரிந்து வருகிறார். பயிற்சி நிலையத்தின் நிர்வாகப் பொறுப்பாளர் திரு தா. வீரசிங்கம் ஒரு அனுபவஸ்தர். 1992 ஜனவரி முதல் இப்பதவியைப் பொறுப்பேற்று நடத்தி வருகிறார். நீண்ட காலமாக ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றிய இவர், 1972 மரவரி முறை நீக்கப்பட்டதும் கட்டைவேலி, உடுப்பிட்டி கள்ளு உற்பத்தி விற்பனை நிலையத்தில் தொடர்ந்து நான்கு வருடங்களாகத் தலைவர் பதவியில் இருந்தவர். பனந் தொழில் பற்றி நன்கறிந்தவர்.

## நோக்கமும் செயற்பாடுகளும்

சீவல் தொழிலாளர்களை உருவாக்குவது மாதிரிப் பனைப் பயிற்சி மையத்தின் பிரதான நோக்கம். இந்த நோக்கத்தின் அடிப்படையில் பயிற்சி வழங்கப்படுகிறது. இதைத் தவிர பனை வளங்களை இனங் காணுதல், வளங்களை அபிவிருத்தி செய்தல், வளங்களை மையமாக வைத்து உணவு உற்பத்தியைப் பெருக்குதல் ஆகியனவும் பயிற்சி நிலையத்தின் செயற்பாடுகளில் இடம் பெறுகின்றன. தொழிலாளியின் சுயதன்மையை விருத்தி செய்வதிலும் பயிற்சி நிலையம் கவனம் செலுத்துகிறது.

வாழ்க்கையோடு ஒற்றி அமைந்துள்ள பனை வளத்தை ஒரு தேசிய வளமாக நிர்ணயித்துள்ளார்கள். வட மாகாணத்தில் 30 லட்சம் பனை மரங்களிலிருந்து பயனைப் பெறலாம். ஆனால் 2 இலட்சம் பனைகளிலிருந்து ஏதோ ஒரு வடிவத்தில் தொழில் செய்து பயனைப் பெறுகிறோம். 2 இலட்சம் பனைகளில் 6 400 தொழிலாளர்கள் தொழில் செய்கிறார்கள். 30 இலட்சம் பனைகளையும் பயன்படுத்த ஒன்றரை இலட்சம் தொழிலாளர்கள் தேவை. காலப் போக்கில் பயிற்சி மூலம் இளந்தலைமுறையினரை இந்தத் தொழிலுக்கு அறிமுகப்படுத்துதல் தமது நம்பிக்கை என்கிறார் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. வீரசிங்கம். 30 இலட்சம் பனை மரங்களையும் உற்பத்தியில் பயன்படுத்திய, தமிழ் ஈழம் சீனித் தேவையைப் பூர்த்தி செய்யலாம். ஒரு மாதத்திற்கு 2000 மெட்ரிக் தொன் சீனி என்ற வகையில் வருடத்திற்கு 24,000 மெட்ரிக் தொன் சீனி உற்பத்தி செய்யலாம் என்ற சிந்தனையில் இந்த நிலையம் அக்கறை காட்டிச் செயற்படுகிறது. மாதிரிப் பனைப் பயிற்சி நிலையத்தின் நோக்கம் ஒட்டுமொத்தமாக தமிழீழத்தின் பொருளாதார வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது.

## கற்பித்தலும் பாடத்திட்டமும்

இந்நிலையத்தில் வழங்கப்படும் பயிற்சி ஒரு வதிவிடப் பயிற்சியாகும். உணவு மற்றும் இருப்பிட வசதிகளோடு பயிலுனர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா உதவு தொகையாக வழங்கப்படுகிறது. நான்கு மாதங்கள் வெற்றிகரமாகப் பயிற்சியை முடித்துப் பயிலுனர் வெளியேறுகிறார்கள்.

முதற் தொகுதியில் பதினெட்டுப் பேர் பயிற்சியைப் பெற்றார்கள். இவர்கள் தெங்கு - பனம்பொருள் சங்கங்களில் இணைந்து சீவல் தொழிலாளர்களாகவும், ஊழியர்களாகவும் பணி புரிகிறார்கள்.

இரண்டாவது தொகுதியினருக்கான பயிற்சி 1992 ஜனவரி 1 ஆம் திகதி ஆரம்பமாகியது. அச்சுவேலி, பருத்தித்துறை, காரைநகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த ஐம்பது பேர் பயிற்சி பெறுகிறார்கள். செயல்முறைப் பயிற்சி வகுப்பறைக் கற்பித்தல் - இந்த இரண்டு முறைகளும் பின்பற்றப்படுகின்றன. ஆனால், செயல் முறைக்கு அதிக அழுத்தம் தரப்படுகிறது போதனாசிரியர்களின் வழிகாட்டுதலில் பயிலுனர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகிறது. பாடத்திட்டம் பனை ஏறும் பயிற்சி, பதநீர் தயாரிக்கும் பயிற்சி, பனைத்தும்பு அடிக்கும் பயிற்சி, வெல்லம், சீனி தயாரித்தல் பயிற்சி நெறிகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. பயிலுநர் பயிற்சி பெற்று வெளியில் சென்று சுயம்பாகத் தொழில் செய்யும் போது, தமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அனுகூலமாக உப உணவு உற்பத்தியில் பயிற்சி வழங்கப்படுகிறது. உப உணவு உற்பத்தியிலும் ஈடுபடுகிறார்கள்.

ஜனவரி முதல் மார்ச் ஏப்ரல் மாதங்கள் வரை அரிபனை வடிப்பனைச் சீவல் முறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது ஏப்ரல் மாதத்தோடு பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறுகிறார்கள். இக் காலப் பகுதியில் காய்வெட்டிச் சீவல் முறையில் இவர்களுக்குப் பயிற்சி வழங்கப் படுவதில்லை. காய்வெட்டிப் பருவம் ஜூன் முதல் ஒக்டோபர் வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கியது. இக் காலத்தில் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறியவர்களை மீளவும் அழைத்துக் காய்வெட்டிச் சீவல் முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத் தொழில் முறைக்கான பயிற்சி இடைக்கால சேவைப் பயிற்சியாக வழங்கப்படுகிறது

தென்னை மட்டை கட்டி ஏறுதல், கயிறு கட்டி ஏறுதல் முறைகளிலும் பயிற்சி வழங்கப் படுகிறது வீட்டில் சுயம்பாகப் பழகுவதற்கும் இந்த மையத்தில் பழகுவதற்கும் வித்தியாசம் உள்ளது என்கிறார் இதன் நிர்வாகப் பொறுப்பாளர் ஒரு முறை சார்கல்வியமைப்பாகப் பாடத்திட்டம் மற்று நேரசூசிகளுக்கமைய பயிற்சிகள் நடைபெறுகின்றன. கட்டுப்பாட்டிலும், ஒழுங்கிலும் அதிக கவனம் செலுத்தப்படுகிறது

பாடத்திட்டத்தில் வழமையான சீவல் பயிற்சி, பனம்பொருள் உற்பத்திப் பயிற்சி இடம் பெறுவதைத் தவிர மாதத்தில் பதினைந்து விரிவுரைகளும் இடம் பெறுகின்றன. யாழ்ப்பாணத்தில் பல்வேறு திணைக்களங்களையும் சேர்ந்தவர்கள் முகாமைத்துவம், கூட்டுறவு, கணக்கியல் உற்பத்தித்திறன் ஆகிய கற்கை நெறிகள் தொடர்பான விரிவுரைகளை நடத்துகிறார்கள்.

பயிற்சியாளர் மொத்தம் 350 பனைகளில் சீவலை மேற்கொண்டுள்ளார்கள். ஒரு பயிலுனர் குறைந்தது ஐந்து மரங்களுக்கு மேல் சீவ வேண்டும்.

மொத்தம் நான்கு போதனாசிரியர்கள் மாதிரிப்பனை பயிற்சி நிலையத்தில் நிரந்தர சேவையில் உள்ளனர். கட்டுரையாளருக்குப் போதனாசிரியர்களில் இருவரைச் சந்திக்கும் வாய்ப்புக்கிடைத்தது ஒருவர் திரு. க. சோமசுந்தரம் (வயது 57) பருத்தித்துறையை இருப்பிடமாகக் கொண்டவர். இவர் இந்த நிலையத்தில் முதல் தொகுதியில் பயிற்சி பெற்று வெளியேறியவர். இவர் 1500 ரூபா சம்பளம் பெறுகிறார். மேலதிக வேலை செய்தால் மணித்தியாலத்துக்கு 10 ரூபா மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. மற்றவர் மூளாய் வாசியான திரு. ஆ. அன்னலிங்கம் சிரேஷ்ட போதனாசிரியரான இவருக்கு மாதாந்தம் 2900 ரூபா சம்பளக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. போதானாசிரியர்களுக்கு வதிவிடமும் உணவும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

பயிலுனரைப் பொறுத்தவரையில் குறிப்பாகச் சீவல் தொழிலைச் சாராத குடும்பத்தைச் சேர்ந்தவர்களையும் சந்திக்க முடிந்தது. காரைநகரைச் சேர்ந்த க. உதயச்சந்திரனும் தி. தவராசாவும் மீன் பிடியைத் தொழிலாகக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். கூடுதலாக உழைக்கலாம் என்பதற்காகத் தாம் இந்தத் தொழிலைத் தேர்ந்தெடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அத்துடன் நாட்டில் பனை அதிகமாக இருக்கிறது. இத் தொழிலைப் பழகினால் என்ன என்ற ஆர்வத்தினால் சீவல் தொழிலைப் பழகுவதாகவும் தெரிவிக்கிறார்கள். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் பொ. சிறிகாந்தன் ஸி. ராஜேஸ்கண்ணன் க. கங்காதரன் ஆகிய பயிலுனர்களும் வருமானம் கூடுதலாகப் பெறலாம் என்ற நோக்கத்துடன் சீவல் தொழில் பயிற்சியைப் பெறுவதாகத் தெரிவிக்கிறார்கள். பொருளாதாரத் தடையை அரசு அமுல் படுத்தியிருக்கும் வேளையில் சுயதேவையை நிறைவு செய்ய வேண்டும் என்று தொழிலைப் பழகுவதான கருத்தும் அவர்கள் சிந்தனையில் இழையோடி நிற்கின்றன.

வலிகாமத்திலும் வன்னிப் பிராந்தியத்திலும் அண்மையில் பயிற்சி முகாம்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பெண்களுக்கும் கைப்பணிப் பயிற்சி வழங்கும் திட்டம் ஒன்றும் உருவாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வளவு காலமும் இத் தொழிலை வேறு விதமாகப் பார்த்திருந்த சமூகம் குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் மரபு வழியாக வந்துள்ள அபிப்பிராயங்களைத் தகர்த்தெறிந்து தமிழ் ஈழத்தில் பொருளாதார நன்மை கருதி இந்தத் தொழிலில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வார்கள் என்பது மாதிரிப் பனைப் பயிற்சி நிலையத்தை நிறுவியவர்களின் நம்பிக்கையும் எதிர்பார்ப்புமாகும்.



பயிற்சி முடிந்தவர்க்கான சான்றிதழை துணைவேந்தர் வழங்குகிறார்.

---

## தீர்வை

பிரிந்து செல்வதென்ற இறுதியான கட்டத்தை அடைவதற்கு முன்னர் சமரசத் தீர்வுக்கான சகல வாய்ப்புக்களையும் வழி முறைகளையும் புலிகள் பயன்படுத்த வேண்டும் என்பதும் சர்வதேச சமூகத்தின் விருப்பமாகும். இந்த அடிப்படையில் உலக நாடுகள் விடுதலைப் புலிகள் மீது ராஜரீக அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றன. தனியரசுக்கு மாற்றுத் திட்டமாக ஒரு உருப்படியான சுயாட்சியமைப்பைப் பெற்றுக் கொள்வதன் சாத்தியக் கூறுகளைப் பரிசீலனை செய்ய வேண்டுமெனவும், மேற்குலகம் நிர்ப்பந்தித்து வருகிறது. அதே சமயம் தமிழருக்கு நீதி வழங்க சிங்கள அரசு மறுத்து அடக்கு முறை தீவிரமாகி, இரு தேசிய இனங்களும் ஒன்றுபட்டு வாழ முடியாத நிலை தோன்றி அரசியற் தீர்வு சாத்தியமாக நெருக்கடி எழுமானால் உலக சமுதாயத்தின் ஆதரவு தமிழர் சார்பாகத் திரும்பலாம். இதனை உலக நாடுகள் மறைமுகமாக சூசகமாக சுட்டிக்காட்டத் தவறவில்லை.

நீண்டகாலமாகத் தமிழ் மக்களுக்கு எதிராக ஏவிவிடப்படும் கொடூர ஒடுக்குமுறை பற்றியும், அரசியல் தீர்வு காணும் விவகாரத்தில் சிங்களப் பேரினவாதம் கடைப்பிடித்து வரும் விட்டுக் கொடாத போக்குப் பற்றியும் சர்வதேச சமூகம் நன்கறியும். அப்படியிருந்தும் ஒன்று பட்ட இலங்கையின் சீழ் ஒத்திசைவான அரசியற் தீர்வு ஏற்படும் சாத்தியங்கள் இருப்பதாக மேற்குலகம் நம்புகிறது இந்தப் போலி நம்பிக்கையின் அடிப்படையில், தனது வர்த்தக நலன்களை மட்டும் கருத்திற் கொண்டு இரு தரப்பு மீதும் அழுத்தங்களைப் பிரயோகிக்கிறது.

இந்தச் சர்வதேச புறநிலை நிர்ப்பந்தங்களைக் கருத்திற் கொண்டுதான் எமது அரசியல் அணுகுமுறை நெறிக்கப்பட்டிருக்கின்றது சிங்கள ஆளும் 'வர்க்கமும்' அதற்குப் பக்கபலமாக நிற்கும் பேரினவாத சக்திகளும் தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப் போவதில்லை என்பதையும், நியாயமான தீர்வுக்கு இணங்கப் போவதில்லை என்பதையும், நாம் தொடர்ந்து உலகிற்கு எடுத்துக் காட்டி வர வேண்டும். தமிழரின் அடிப்படை அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவும் சிங்கள ஆட்சியாளர்கள் தயாரில்லை என்பதை உலகிற்கு தொடர்ந்து உணர்த்துவதன் மூலமே, எமது தன்னாட்சி உரிமைப் போராட்டத்திற்கு நாம் உலகத்தின் ஆதரவைத் திரட்ட முடியும். இந்தக் குறிக்கோளின் அடிப்படையில்தான் புலிகள் இயக்கம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்து விட்டிருக்கிறது; சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கும் தயாராக இருக்கிறது; அரச தரப்பிலிருந்து உருப்படியான ஒரு தீர்வுத் திட்டம் முன் வைக்கப்பட்டால், அதனைப் பரிசீலனை செய்யவும் தயாராக இருக்கிறது.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினை குறித்து ஆளும் கட்சியோ, எதிர்க்கட்சியோ இதுவரையும் எதுவித தீர்வுத் திட்டத்தையும் முன் வைப்பதற்குத் துணியவில்லை. அப்படி ஒரு தீர்வை முன்மொழிவதும் அவர்களது நோக்கமல்ல. தமிழரைத் திருப்திப் படுத்தும் வகையில் ஒரு முற்போக்கான திட்டத்தை முன் வைத்து சிங்களப் பேரினவாத சக்திகளைப் பகைத்துக் கொள்ளவும், அவர்கள் தயாராக இல்லை. தமிழர்களுக்கு உரிமை மறுப்பதே சிங்களத் தேசப்பற்று எனக் காலங் காலமாக இனத்துவேச அரசியலை நடத்தியவர்கள், இப்பொழுது தமிழர்களுக்கு நீதி வழங்குவது எப்படி?

தமிழரின் இனப் பிரச்சினையை இழுத்தடிப்பதற்காக 1983 ஆம் ஆண்டு இறுதியில் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு, குழந்தைப் பராயத்திலேயே இறந்து போனது. அதன் வாரிசாக, 1989 இல் மீண்டும் மறுபிறப்பு எடுத்த இன்னுமொரு சர்வகட்சி மாநாடு செயலிழந்து செத்துப் போகும் தறுவாயில் இருக்கிறது இந்த நிலையில் இன்னுமொரு சர்வ கட்சிக் கூட்டாக பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. தமிழர் பிரச்சினையை ஆராய்ந்து தீர்வு ஒன்றைக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் நியமிக்கப்பட்ட இந்தக் குழு, தமிழர் தாயகத்திற்கு வருகைதந்து தமிழரின் நிலையை நேரில் கண்டறிய மறுக்கிறது. கொழும்பிலிருந்து ஆராய்ச்சியை நடத்திக் கொண்டிருக்கும் இந்தக் குழு, விடுதலைப் புலிகளிடம் இருந்து தீர்வுத் திட்டம் ஒன்றை எழுத்தில் கேட்கிறது.

இந்த நிலையில் யார் தீர்வுத் திட்டத்தை முன் வைப்பது என்ற கேள்வி எழுகிறது

தமிழருக்கு அநீதி இழைத்தவர்கள்தான், உரிமை மறுத்தவர்கள் தான், தமிழருக்கு நீதியும் உரிமையும் வழங்க முன்வரவேண்டும்; ஒரு தீர்வை முன்வைக்க வேண்டும்.

தமிழரின் உரிமைக்காகப் போராடிவரும் விடுதலைப் புலிகளிடம் ஒரு தீர்வுத் திட்டம் இல்லாமலில்லை, தமிழீழத் தனியரசுதான் அந்தத் தீர்வு இந்தத் தீர்வைச் சிங்கள ஆளும் வர்க்கம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அப்படியானால் மாற்றுத் தீர்வை முன்வைப்பது அவர்களது கடப்பாடு ஆகும் அப்படி வைக்கப்படும் மாற்றுத் தீர்வு தமிழீழ மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதா என்பதை விடுதலைப் புலிகள் பரிசீலனை செய்யத் தயார். இதுதான் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு,

# இந்து சமுத்திரத்தில் கூட்டு கடற்படை பயிற்சி; அமெரிக்கா - இந்தியாவின் புதிய உறவு

அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் இந்து சமுத்திரத்தில் கடற்பயிற்சியில் ஈடுபடப்போவதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார். இப்பயிற்சியின் மூலம் அமெரிக்க இந்திய இராணுவ ஒத்துழைப்பில் பலமான ஓர் அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சோவியத்தின் வீழ்ச்சியின் பின்னர் சர்வதேச நிலைமைகளுக்கு ஏற்ப இந்தியா தீவிரமாக அதேவேளை வியப்பூட்டும் அளவில் பெரும் மாற்றங்களை செய்து வருகின்றது. இவ்வியப்பூட்டும் மாற்றங்களில் இந்தியப் பொருளாதாரக் கொள்கையும், வெளிநாட்டுக்கொள்கையும், அதனுடன் நெருங்கிய தொடர்புடைய பாதுகாப்புக் கொள்கையும் முக்கியமானவையாகும்.

## பலவீனமடைந்த இந்திய பாதுகாப்பு

சோவியத் யூனியனின் வீழ்ச்சி இந்தியாவன் பாதுகாப்பு அத்திவாரத்தையே ஆட்டம் காணவைத்ததெனலாம். அதிலும் இந்தியாவின் விமானப் படைப்பலத்தை வெகுவாகப் பாதித்ததெனலாம். 800 போர் விமானங்களைக்கொண்ட 41 பிரிவு

## ரஷ்யா - பாகிஸ்தான் புதிய நட்பு

இந்தியா இவ்வாறான தொரு சந்தேகம் கொள்வதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. கடந்த வருட இறுதியில் பாகிஸ்தானும் ரஷ்யாவும் நட்புறவு ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டன. இதேவேளை பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த ரஷ்ய உப ஜனாதிபதி அலெக்சாண்டர் ரஸ்டோகி பாகிஸ்தானில் வைத்து வெளியிட்ட காஷ்மீர் தொடர்பான கருத்து இந்தியாவை மேலும் சந்தேகம் கொள்ள வைத்தது. இதுவரை காஷ்மீர் ரஷ்யா-இந்தியாவின் ஒரு அங்கமென ரஷ்யா தெரிவித்துவந்தது. ஆனால், ரஷ்யாவின் உப ஜனாதிபதி அலெக்சாண்டர் ரஸ்டோகி காஷ்மீர் பிரச்சினை சர்வதேச ஒப்பந்தங்களின் அடிப்படையில், பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படவேண்டும் எனத் தெரிவித்தார். ஆனால், பின்னர் காஷ்மீர் விவகாரத்தில், ரஷ்யாவின் முன்னைய நிலைப்பாட்டில் மாற்றம் எதுவுமில்லை என மொஸ்கோ தெரிவித்த போதும் இந்தியா அதனை நம்பத் தயாராகவில்லை.

அடுத்ததாக தென்னாசி

செய்து விமானப் படையின் பலத்தை பாதிக்காதளவிட மேம்படுத்த நினைத்தார். இதைத் தொடர்ந்து மிராஜ்-2000 இந்திய விமானப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

ஆனால், பாகிஸ்தானுக்கான ஆயுத விநியோகத்தை அமெரிக்கா இடை நிறுத்தியதைத் தொடர்ந்து பாகிஸ்தான் பிரான்சிடம் இருந்து மிராஜ் 2000 ரக விமானங்கள் நாற்பதை கொள்வனவு செய்யக் கடந்த ஜனவரியில் ஒப்பந்தம் செய்த அதே வேளை, அவ் விநியோகத்தை உடன் வழங்கவும் பிரான்ஸ் சம்மதித்துள்ளது.

இந்நிலையில், இந்திய விமானப் படை தற்பொழுதுள்ள தனது முதன்மையை, பாகிஸ்தானுக்கு மிராஜ் - 2000 போர் விமானங்கள் வந்து சேர்ந்த பின்னும் பேண முடியுமா என்பது சந்தேகமே. மிராஜ்- 2000 போர் விமானங்கள் தற்போது இந்தியாவிடம் இருப்பினும் அவை சற்றுப் பழையவையே. சுமார் ஒரு தசாப்தம் கடந்த தொழில்நுட்பம் உடையனவையே. புதிய மிராஜ் -2000 ரக போர் விமானங்கள் கடந்த தசாப்த விமானங்களை விடவும், நவீன ஏவுகணை வசதிகளும் ராடார் வசதிகளும் கொண்டவையாக உள்ளதோடு, அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லக்கூடியவையாகவும் உள்ளன.

மையமாகக்கொண்டே பாகிஸ்தான் விமானப்படை அமைக்கப்பட்டிருந்தது. பாகிஸ்தான் விமானப்படை தற்பொழுது எப்-16 விமானங்கள் 40 கொண்டுள்ளது. அத்தோடு 11 விமானங்கள் உடன்கிடைக்கும் நிலையில் இருந்தன. மேலும் 60 விமானங்கள் தயாரிப்பு நிலையில் இருந்தன. ஆனால் அமெரிக்காவின் உதவி நிறுத்தத்தால் இவற்றின் விநியோகம் பாதிப்படைந்தன. இருப்பினும் பாகிஸ்தான் தனது அணு ஆயுதக் கொள்கையைக் கைவிட மறுத்ததின் விளைவாக அமெரிக்க பாகிஸ்தான் உறவு தவிர்க்க முடியாத அளவில் விரிசல் கண்டுள்ளது.


இதேவேளை சோவியத்யூனியனின் சிதறுதலினால் அணு ஆயுதபலத்தை பெற்று விட்ட இஸ்லாமிய உலகமும், மேற்கு ஆசியாவிலும் தென் மேற்கு ஆசியாவிலும் வளர்ந்து வரும் இஸ்லாமிய அடிப்படைவாதமும் அமெரிக்க - இந்திய உறவில் ஒரு இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்கியுள்ளன. தெற்காசியாவைப் பொறுத்தமட்டில் கம்யூனிஸ சித்தாந்தம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அமெரிக்கா இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கே இன்று அஞ்சுகிறது. அத்தோடு அணுவாயுத ஆற்றல் பெற்ற இஸ்லாமிய அடிப்

இந்திய அமெரிக்க உறவில், நெருக்கத்தையும், இராணுவ ஒத்துழைப்பையும் ஏற்படுத்த வழி ஏற்படுத்தியுள்ளன.

1987 ஆம் ஆண்டு, ராஜீவ் காந்தி - ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தில் அமெரிக்க வானொலி நிலையம் ஒன்று இலங்கையில் அமைப்பதற்கு கட்டுப்பாடுகள் இந்தியாவால் விதிக்கப்பட்டன. இலங்கையிலிருந்த வெளிநாட்டு கூலிப் படைகளும். உலகஸ்தாபனங்களும் வெளியேற்றப்படவேண்டும் எனவும் இணக்கம்காணப் பட்டது. திருமலையில் அந்நிய கடற்படைக்கு தளவசதி வழங்கக் கூடாது எனவும் இந்தியா கட்டுப்பாடு விதித்தது. ஆனால், இன்று நிலைமை தலைகீழாக மாறியுள்ளது.

அமெரிக்க கடற்படையுடன் இணைந்து போர் ஒத்திகையில் ஈடுபட இந்தியா முற்பட்டுள்ளதோடு அதுகுறித்துப் பெருமைப்பட்டுக் கொள்ளும் நிலையிலும் உள்ளது அத்தோடு அமெரிக்க கடற்படைக்கு துறைமுகவசதிகளை அளிப்பது குறித்தும் ஆராய்ந்து வருகிறது. இதேபோல் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்திக்கொண்டுள்ளதோடு பலதுறைகளில் ஒத்துழைக்கவும் முன்வந்துள்ளது.

இந்நிலையில் எதிர்கால அமெரிக்க இந்திய உறவு இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும் குறிப்பாக இஸ்லாமிய உலகத்திலும் தென்னாசியாவிலும் குறிப்பிடக்கூடிய வித




சோவியத் தயாரிப்பு மிக் - 29

## இந்தியாவின் கொள்கை மாற்றம்

இந்நிலையில், இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையில் ஏற்படுத்திக் கொண்ட மாற்றத்தோடு பாதுகாப்புக் கொள்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டது. இதன் பிரகாரம் மேற்கில் குறிப்பாக அமெரிக்காவில் இருந்து பெருமளவு இராணுவத்தளபாடங்களைக் கொள்வனவு செய்வதில் அக்கறை கொண்டுள்ளது. இதில் அமெரிக்கத் தயாரிப்பான எப்-16 போர் விமானங்கள் உட்பட வேறு விமானங்கள், ராடர்கள் கண்ணிகள் என்பனவற்றைக் கொள்வனவு செய்வது நோக்கமாகும்.

இதே வேளை, அமெரிக்க இராணுவ தளபாட உற்பத்தி நிறுவனங்களுடன்சேர்ந்து இந்தியாவில் இராணுவ தளபாட உற்பத்தியில் ஈடுபடுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் முதற்கட்டமாக லேசர் கல் போர் விமானங்களின் உற்பத்தியில் இந்தியாவின் ஊடாக ஈடுபட அமெரிக்க நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் விஜயத்தின்போது அது பற்றியும் பேசப்பட்டதாக தெரிகிறது.



பிரான்ஸ் தயாரிப்பு [மிராஜ்]- 2000

களில் 32 பிரிவுகள் சோவியத் தயாரிப்புவிமானங்களேஆகும் அதில் பழைய மிக் - 21 ரகத்தில் இருந்து புதிய மிக்-29 ரகம் வரை உள்ளன சோவியத்யூனியனின் சிதைவு இவ்விமானங்களுக்கு உதிரிப் பாகங்களைப் பெறுவதில் கூட சிக்கல்களை ஏற்படுத்தியிருந்தன. சோவியத்யூனியனின் சிதைவின்பின் கடந்த வருட இறுதியில் ரஷ்யா சென்ற இந்தியக் குழுவிடம் விமானங்களுக்குரிய உதிரிப்பாகங்களை ரஷ்யாவழங்குவதாக உறுதியளித்தது ஆனால் இதில் இரண்டுவிடயங்கள் பிரச்சினையாகவே இருந்தன ஒன்று தொடர்ந்தும்ரஷ்யாவை நம்பி இந்தியாவின் பாதுகாப்பைப் பணயம் வைக்க முடியுமா? இரண்டாவதுமுன்னர்சோவியத்யூனியன்வழங்கியதுபோன்று சலுகை அடிப்படையிலும் ரூபா அடிப்படையிலும் இவற்றை வழங்குமா? என்பதும் ஆகும்.

இதில் ரஷ்யாவின் பொருளாதார நெருக்கடியில் உதிரிப்பாக விற்பனையையும் அதனால் வரும் அந்நியச் செலாவணி வருகையையும் இழக்க விரும்பாது என்றே எதிர்பார்க்கலாம். ஆனால், இந்திய ரூபாய்களிலும், சலுகைகளிலும், விவகாரத்தை நடத்த முன் வருமா என்பது சந்தேகத்திற்குரியதே. இதற்கும் மேலாக கடந்த காலத்தில் இந்தியாவுடனான நட்புரிமையுடன் ரஷ்யா நடந்து கொள்ளுமா என்பதும் கேள்விக்குரிய தாகியுள்ளது.

யாவை அணுவாயுதமற்ற பிரதேசமாக்க வேண்டும் என பாகிஸ்தான் ஐ. நா. வில் கொண்டு வந்த தீர்மானத்திற்கு ரஷ்யா ஆதரவளித்தமை மேலும் ரஷ்யா - இந்தியா உறவில் சந்தேகங்களையும், விரிசலையும் ஏற்படுத்தி வந்தன. இவ் விவகாரம் 1971 ஆம் ஆண்டு இந்தியா - சோவியத் பாதுகாப்பு ஒப்பந்தத்தையே கேள்விக்குரியதாக்கியது.

## மிராஜ் - 2000; இந்திய விமானப்படையும்

இதேவேளை சோவியத் போர் விமானங்களுக்கு அடுத்தபடியாக இந்திய விமானப் படையில் பிரான்ஸ் தயாரிப்பான மிராஜ் - 2000 முக்கிய பங்கு வகிக்கின்றன. அண்மையில் பிரான்ஸ் பாகிஸ்தானுக்கு மிராஜ் 2000 போர் விமானங்களை விற்பனை செய்ய முன் வந்ததைத் தொடர்ந்து இது தொடர்பான சர்ச்சையும் தற்பொழுது கிளம்பியுள்ளது.

எண்பதுகளின் ஆரம்பத்தில் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு வழங்கிய பாரிய இராணுவ உதவிகளில் எப் - 16 போர் விமானங்களும் அடங்கியிருந்தன. இந் நிலையில், இந்தியாவின் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி பிரான்சிடம் இருந்து மிராஜ் - 2000 விமானங்களைக் கொள்வனவு

## பாக். அமெரிக்க உறவில் விரிசல்

பாகிஸ்தானின் அணு ஆயுத உற்பத்திதொடர்பான விவகாரம் பாகிஸ்தான் அமெரிக்க உறவில் குறிப்பிடக்கூடிய விரிசலை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தான் அணுக்குண்டைத் தயாரித்து விட்டதாக நம்பும் அமெரிக்கா இதன் காரணத்தினால், பாகிஸ்தானுக்கான இராணுவப் பொருளாதார உதவிகளை இடை நிறுத்தியுள்ளது.

இதனால், பாகிஸ் தானின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறிப்பிடக் கூடிய விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளது அமெரிக்க தயாரிப்பான எப்-16 விமானங்களை

படைவாதத்தை எதிர்த்துநிற்கக் கூடிய சக்திமிக்க நண்பன் ஒருவனும் ஆசியாவில் அதற்குத் தேவையாகவுள்ளது

இந்நிலையில் இதற்கு ஏற்றால் போல், இந்தியாவும் தனது பொருளாதாரக்கொள்கையையும், வெளிவிவகாரக்கொள்கையையும் வகுத்துக் கொண்டமை

த்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். இது தென்னாசியாவினதும் தென்மேற்கு ஆசியாவினதும் மேற்கு ஆசியாவினதும் வலுச்சமநிலையையும் பெரியளவில் பாதிக்கும் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

-ஜெயராஜ்

---

## மாலைக்கண் ....

தியால் பாதிக்கப்பட்டவர் திருமணம் செய்யவோ, குழந்தைகள் பெற்றுக்கொள்ளவோ கூடாதென்று இது முற்றிலும் தவறான நம்பிக்கையாகும். ஏனெனில் இவ்வியாதியால் பாதிக்கப்பட்டவருக்கு பிறக்கும் குழந்தைகளில் நான்கில் மூன்றுபேர் இவ்வியாதியால் பாதிக்கப்படமாட்டார்கள்.

### தடுப்பதற்கு சில ஆலோசனைகள்

இவ் வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள் திருமணம்செய்ய முன்பு கண் வைத்தியரின் ஆலோசனை பெறுவது நல்லது. குறிப்பாக பரம்பரையில் இந்நோய் உள்ளவர் அல்லது ஏற்கனவே இவ்வியாதியால் பாதிக்கப்பட்டவர் தன்னைப் போன்ற இவ் வியாதி உள்ளபரம்பரையில்வந்தவரை அல்லது ஏற்கனவே இந்த வியாதியால் பாதிக்கப்பட்டவரை திருமணம் செய்வதைத் தவிர்க்கவேண்டும். ஏனெனில் இவ்வாறு இரண்டு பெற்றோர்களும் இவ்வியாதியால் பாதிக்கப்பட்டிருப்பின் இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு இவ்வியாதி ஏற்படும் ஆபத்து அதிகரித்தே காணப்படுகின்றது. மேலும் மிக நெருக்கமான உறவினர்களுக்குள் (இரத்த உறவு) திரும்பத் திரும்ப திருமணம் செய்வதையும் தவிர்க்கவேண்டும். உதாரணமாக அண்ணன், மாமன்' மச்சான், மச்சாள் என்று. கடைசியாக குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும்போது இரத்தப்பரிசோதனை மூலம் குழந்தை இவ் வியாதியினால் பாதிக்கப்படுமா? என்பதைக் கண்டறிந்து தேவையான முன்னெச்சரிக்கை சிகிச்சையை மேற்கொள்ளலாம்.

---

## துப்பாக்கிப் பிரயோகம்

மண்டைதீவு - பூநகரி, கல்முனைப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் நேற்று அதிகாலை 3 மணிக்கு கரையோரப் பகுதிகளைநோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அணுவாயுத பரவல் தடுப்பு உலகம் பூராவும் வேண்டும்

## - நரசிம்மராவ்

(சென்னை)

அணுவாயுதப் பரவல் தடுப்பு உலகம் முழுவதற்கும் இருக்க வேண்டும் அணுவாயுதங்களை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்றும், இதில் டாரபட்சப் போசகிற்கு இடமில்லை என்றும் இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் கூறினார்.

திருப்பதியில் தொடங்கிய அகில இந்திய இந்திரா காங்கிரஸ் கட்சியின் மாநாட்டுக் கூட்டத் தொடரில் நேற்றுத் தலைமைதாங்கி உரையாற்றிய பிரதமரும், இந்திரா காங்கிரஸ் தலைவருமான பி.வி. நரசிம்மராவ் கூறினார்.

''நாட்டையும் உயர்த்துவோம். அதைக் கட்டியும் காப்போம்'' என்ற புதிய கோஷத்தையும் அவர் முன்வைத்தார்.

இந்த மாநாடு உலகில் நம்ப முடியாத அளவுக்குப் பல நிகழ்வுகள் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில்நடைபெறுகிறது என்று சுட்டிக்காட்டிய அவர், இப்போது உலகில் ஒரு அணி மட்டுமே இருப்பது முக்கிய மல்ல, நாட்டின் வளர்ச்சி என்பதே முக்கியம். அதே சமயம் உலகில் ஏற்பட்டுள்ள பொருளாதார மாற்றங்களுடன் இந்தியா பின்னிப் பிணைந்திருப்பதை உணர வேண்டும் என்றார்.

## இன்று வர்த்தக நிலையங்கள் மூடப்படும்

பெரிய வெள்ளியை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை வர்த்தக ஊழியர்கள் விடுமுறை தினமாகும் நல்லூர் பிரதேசத்துக்குட்பட்ட கல்வியங்காடு, திருநெல்வேலி கொக்குவில், கோண்டாவில் ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தகர்கள் தங்கள் வர்த்தக நிலையங்களை மூடி ஊழியருக்கு விடுமுறை வழங்குமாறு வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம் பணிவான வேண்டுகோள் விடுத்துள்ளது,

## காங்கிரஸ் செயற்குழு தேர்தல் மூலம் தெரிவு

திருப்பதியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்கள் 10 பேர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அர்ஜுன்சிங், திபேந்திரபிரசாத், ஏ.கே. அன்ரனி, சரத் பவார். ஆர். கே தவான், குலாம்நபி அசாத், பல்ராம் ஜாக்கர், அஹமட் பட்டேல், ராஜேஸ்பைலட், விஜெயபாஸ்கர்ரெட்டி ஆகியோரே காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களாவர்.

தேர்தல் முடிவுகளின்படி காங்கிரஸின் செல்வாக்குள்ள இரண்டாவதுதலைவராக அர்ஜுன்சிங் இருப்பதாக பி.பி.சி தெரிவித்தது.

## வாராந்தக் கருத்தரங்கு

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் இடம்பெறும் வாராந்த கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள கலை, பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும். இவ்வார அமர்வில் கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள் ''எனது கலை இலக்கிய வாழ்க்கை'' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார்.

# ஆப்கான். ஜனாதிபதி ராஜினாமா ஐ. நா. காரியாலயத்தில் சரண்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி நஜிபுல்லா இராஜினாமாச் செய்துவிட்டார். இதனை அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

கடந்த செவ்வாயன்று கிளர்ச்சியாளர்கள் பிரதான விமான நிலையமொன்றைக் கைப்பற்றியதை அடுத்து நஜிபுல்லா நாட்டை விட்டுவெளியேற முயற்சித்தபோது, அது கைகூடவில்லை,

நஜிபுல்லா காபுல் நகரில் ஐக்கிய நாடுகள் காரியாலயத்தில் தஞ்சமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை நான்கு உப ஜனாதிபதிகளை உள்ளடக்கிய செயற்குழு ஒன்றிடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனிடையேபாகிஸ்தானில் கூடிய 23 ஆப்கான் எதிர்ப்புக் கெரில்லாக் குழுக்கள் ஆப்கான் இடைக்கால நிர்வாகத்தில் பங்குபற்றுவது குறித்து ஆராய்ந்ததாக செய்திகள்தெரிவிக்கின்றன. அவை தம்மிடையே ஒத்த கருத்தை ஏற்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன. இந்த கூட்டத்திற்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ்ஷெரிப் தலைமைவகித்தார்.



## லிபிய விமானங்கள் தரையிறங்கத் தடை

லிபிய விமானங்களைத் தரையிறக்குவதற்கு எகிப்தும் சுவிற்சலாந்தும் அனுமதி மறுத்துள்ளன.

லிபியாவுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் அமுலுக்கு வந்ததனைத் தொடர்ந்து லிபிய நாட்டுவிமானங்களை தரையிறங்க மேற்படி இரு நாடுகளும் மறுப்புத் தெரிவித்துள்ளன. லிபியா விமானங்கள் எகிப்திலிருந்தும்சுவிற்சலாந்தில் இருந்தும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

இன்னும் பல நாடுகளும் இத்தடையை அமுலுக்குக் கொண்டுவரும்என எதிர்பார்க்கப்படுகிறது.

### தெற்கில்

ரான போராட்டம் தென்னிலங்கையில் வளர்ச்சி பெற்று வருகின்றது. இந்நிலையில், வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பெரும் போர்களைத் தமிழருக்கு எதிராக நடத்துவதன் மூலம் சிங்கள மக்களின் இனவாத உணர்வை கிளறிவிட்டு மக்களின் எண்ணங்களைச் சிறிலங்கா அரசாங்கம் திருப்ப முனைவதாகத் தெரியவருகின்றது. இதன் மூலம் அரசிற்கெதிரான போராட்டங்களை திசை திருப்பிவிடலாம் என அரசு கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### இரண்டு

'டெலிக்கா' 'ஹைஏஸ்' வாகனங்கள் பற்றி எச்சரிக்கையாக இருக்கும்படியும் சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் கூறியதாக 'லங்காபுவத்' தெரிவித்துள்ளது.

### சொல்லொணாத்

விக்கப்பட்டுள்ளதாவது,

வைத்திய வசதிகள் இல்லாத நிலையிலும் உணவுப் பொருள்களை வேண்டிய அளவில் கொண்டு செல்ல முடியாத நிலையிலும் வாழ்ந்து வரும் இம் மக்கள் மிகவும் கஷ்டமுறுகின்றனர்.

தமது சொந்த இடங்களில் கூடுதலான அளவு இராணுவ முகாம்கள் இருப்பதால் அங்கு வாழ முடியாது அகதிமுகாம்களில் நோய் நொடிகளுக்கு இலக்காகி துன்புறும் இம் மக்களின் பரிதாப நிலையை தாங்கள் நேரில் சென்று பார்க்க வேண்டும்.

### தொலைத்

திற்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா ஜனாதிபதியால் மட்டக்களப்பிற்கு இந்தத் தொலைத் தொடர்பு பரிவர்த்தனை இயந்திரம் வழங்கப்படுவதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட போதும் கண்டிக்கு அனுப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### பணச்

இக் கூட்டத்தில் பணச் சுற்றோட்டம் தடைப்பட்டதற்கான காரணங்களை வங்கி அதிகாரிகள் விளக்கிக்கூறினர். அத்துடன் உடனடியாக மாவட்டத்திற்குள் தருவிக்கப்பட வேண்டிய பணத்தொகை பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

மேற்படி விபரங்கள் அடங்கிய பூரண அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வங்கிகளின் தலைமை அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட இருக்கிறது.

இவ் விடயம் தொடர்பாக யாழ் அரசாங்க அதிபரும் மேற்படி அலுவலகத்துடன் விரைவில் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளெடுக்கஇருக்கிறார்

## சித்திரா பௌர்ணமி விழா

சித்திரைப் பௌர்ணமி விழா குடாநாட்டில் உள்ள பல்வேறு இந்து ஆலயங்களிலும் நேற்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. [பா]

### சந்தனக்காடு

வசனம், பாடல்கள், இசை, நெறியாள்கை ஆகியவற்றை பொன் - கணேசமூர்த்தி செய்துள்ளார்.

இந் நாடகத்திற்கு ஓர்கன் வாத்தியத்தை மு ஆனந்த சர்மாவும், ச பாலச்சந்திர சர்மா மிருதங்கமும் வாசித்துள்ளனர். நாடக ஒப்பனையை ஒப்பனைக் கலைஞர் சா.பெஞ்சமின் செய்துள்ளார்.

விருது வழங்கும் விழாவின் போது நாடகம் பற்றிய கருத்துரையை கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை வழங்குவார்.

விடுதலைப்புலிகள் பிரமுகர் யோகரத்தினம் யோகியும் விடுதலைப் புலிகள் மகளிர் படைப்பிரிவு சிறப்புத் தளபதி செல்வி ஜெயந்தியும் கலைஞர்களுக்கான விருதினை வழங்குவர்.

க.பொ.த சாதாரணதரம்
பகல்முழுநேரவகுப்பு
யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.
[சி/4268]

ஸ்ரீதர் திரையரங்கில்
தினசரி மாலை 4.00 மணிக்கும்
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4-00, 6-00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றது.
Eagles Over London
(லண்டன் மேலாக கழுகுகள்) (சி/4272)

## மரண அறிவித்தல்

### திருமதி இ. இரத்தினம்மா

நாச்சிமார் கோயிலடி இராசையா இரத்தினம்மா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இராசையாவின் (உபதபாலதிபர்) அன்பு மனைவியும் கெங்காதரன் ஸ்ரீதரன், உமாராணி ஆகியோரின் அன்புத் தாயாரும். மனோசாந்தி, சத்தியபாமா ஆகியோரின் மாமியாரும் டக்ஷணன், துஷிகா, நிதர்சன். குவலயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார் அன்னாரின் பூதவுடல்இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் 555/4, மதவடி ஒழுங்கை இல்லத்திலிருந்து கோம்பையன் மணல் மயானத்துக்கு தகனக் கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும், தயவு செய்து இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
இராசையா ஸ்ரீதரன்
(மகன்)

(சி/4280)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.